மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

தடை விதித்து அரசியல் கட்சியை ஒழித்திட முடியாது! அப்படி நினைப்பது ஆபத்தாகும்!

சென்னை திருவல்லிக்கேணி, மீர்சாகிப் பேட்டை 78வது வட்டம், இளைஞர் பகுத்தறிவு மன்ற முதலாவது ஆண்டு விழாவும் மேற்படி வட்ட நகரமன்ற உறுப்பினர் தோழர் சி. பார்த்தசாரதி அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டமும் 3-6-60ம் தேதி மாலை மீர்சாகிப் பேட்டை சந்தா சாகிப் தெருவில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் லோகநாதன் இசைக் குழுவினரின் பின்னணி உதவிகொண்டு உதயசூரியன் இயக்கப் பாடல்களைப் பாடினர், இசைப்பூங்கா எம். என். வேலுசாமி இசை விருந்தளித்தார்!

கூட்டத்திற்கு தோழர் அரங்கநாதன் தலைமை வகித்தார்!

நாம் சொல்ல வேண்டியது எவ்வளவோ இருக்கிறது!

எதைச் சொல்வது-எதைத் தள்ளுவது!

சென்னையில் அண்ணா சங்கநாதம்!

வட்டத்து நகரமன்ற உறுப்பினர் திரு. பார்த்தசாரதி அவர்கட்கு வரவேற்பிதழ் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

பின் அறிஞர் அண்ணா அவர்கள் நீண்ட கை ஒலிகளுக்கிடையே பேசியதாவது :—

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே!! தாய்மார்களே!! தோழர்களே!!!

இன்று இந்த மாபெரும் கூட்டத்தில் கலந்து உங்களிடையே நல்லுரை பகரும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்கிறேன். இந்த இளைஞர் பகுத்தறிவு மன்றம் இந்தப் பகுதியில் நமது இயக்கத்தின் துணை மன்றமாகத் திகழ்ந்து ஆற்றி வரும் நற்பணிகளைக் கண்டு பாராட்டுவதுடன், மகிழ்ச்சியும் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் பேசிய நமது நண்பர்கள் மாநகராட்சி மன்றத்தில் நமது கழகம் ஓராண்டு ஆற்றிய நற்பணிகளைப் பற்றியும் அது செய்துள்ள திட்டங்களைப் பற்றியும், அதற்கு துரைத்தனத்தார் அனுமதி கொடுக்காததைப் பற்றியும் மிக விளக்கமாகப் பேசினார்கள்.

நமது நண்பர் முனுசாமி அவர்கள் மிக சிறப்பாகவும், குறிப்பாகவும் நாம் மாநகராட்சி மன்றத்திற்குச் சென்றபின் குடி தண்ணீர் குறைபாட்டை நீக்கச் செய்துள்ள திட்டங்களை விளக்கினார்.

மற்றும் காங்கிரஸ்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் நகரமன்றத்தில் செய்த பணிகளைப் பற்றியும், தூற்றி வருவதைப் பற்றியும் அதை மறைத்துப் பேசி வருவதைப் பற்றியும் கூறி தக்க பதிலளித்தார்.

நமது தோழர்கள் நகரமன்றத்தில் செய்த காரியங்களைப் பற்றி கூட்டங்களில் பேசி வருவதையும், மற்றும் அவர்கள் செய்த பல காரியங்களைக் கேள்விப்படும்போது நானே மிகவும் ஆச்சரியப்படுகிறேன்.

இவ்வளவு நல்ல காரியங்கள் செய்து வருவதை எல்லா மக்களும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் ஆசைப்படுகிறேன்.

நம்முடைய கூட்டங்களில் நாம் அதையெல்லாம் சொல்லி மக்கள் உணரும்படி செய்ய முடியாது. கூட்டங்களில் நாம் கூற வேண்டியது பல இருக்கின்றன. ஒவ்வொரு விஷயத்தையும் கால் மணி நேரமாக ஒதுக்கி வைத்துக் கூறினாலும் நமக்கு நேரம் போதாது.

(3ம் பக்கம் பார்க்க)

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 — 12-6-60 — ஒலி 32

திராவிடத்தில் பெருந்தலை மாநாடு !

உலகம் வெகுவேகமாக சுழன்று கொண்டிருக்கிறது, கண்மூடி கண்திறப்பதற்குள் எத்தனையோ அதிசயங்கள்! எத்தனையோ அற்புதங்கள், எத்தனையோ புதுமைகள், எத்தனையோ பயங்கர நிகழ்ச்சிகள் நிகழ்ந்து விடுகின்றன !

"காலம், இந்த உலகத்தை எப்படிக் கணிக்கிறது, கணித்துக் கொண்டு வருகிறது" என்பதை எவருமே கணித்துச் சொல்லும் நிலையில் இல்லை !

நொடிப் பொழுதில் மடிந்த அரசுகள், அழிந்த நாடுகள் ஏராளம்—மிக ஏராளம!

ராஜ தந்திரிகள் போடுகின்ற திட்டங்கள், நிபுணர்கள், அரசியல் வல்லுனர்கள் நினைக்கின்ற நினைப்புகள் எல்லாம் தூள், தூளாகி விடுகின்றன!

உலகத்தில் நிகழ்ந்து வருகின்ற பயங்கர நிகழ்ச்சிகளை ஒருக் கணம் எண்ணிப் பார்த்தால் போதும்—அப்பப்பா, உள்ளம் நடுங்கும, உடல் பதறும், நெஞ்சமே வெடித்து விடும்!

அப்படி இருந்தும் உலகத்திற்கு புத்தி வந்ததாகத் தெரியவில்லை! அநீதி நடந்து கொண்டு தான் இருக்கிறது அநியாயம், நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது!

வலுத்தவர்கள், பெருத்தவர்கள், இளைத்தவர்களை விழுங்கி ஏப்பமிடத் தான் எண்ணுகின்றனா!

"எங்கே ஏமாளிகள், எங்கே இளித்த வாயர்கள்" என்று தேடித் தேடி அலைந்து வெறிப் பசியைத் தீர்த்துக் கொள்ளத் தான் எண்ணுகின்றனர்!

எதற்கும் எல்லை உண்டல்லவா? அந்த எல்லை மீறப்படுமானல, சுழன்றடிக்கும் பெருங் காற்றில், சுற்றி, சுற்றி வீசும் சூறாவளிக் காற்றில் சிக்கி மடியத்தான் வேண்டும்

இந்த உண்மையை அறிய, இன்னும் பலர் மறுக்கின்றார்கள! பாவம்—அவர்களைக் காப்பாற்றுவது யாரென்பது தான் புரியவில்லை! நாம், மூட பக்தியில் நம்பிக்கை வைத்திருந்தால்—"ஆண்டவனே! உலக மறியாத அந்த அப்பாவிகளை காப்பாற்று" என்று பிரார்த்தனை செய்திடுவோம்! நாம், ஆற்றலிலும், அறிவிலும் நம்பிக்கை வைத்திருப்பதால் அறிவுரை வழங்கி அவர்களைத் திருத்த முயலகிறோம்! உலக நிகழ்ச்சிகளை சுட்டிக் காட்டி "திருந்து இல்லையேல் அழிந்து விடுவாய்" என்று எச்சரிக்கை செய்கிறோம்!

நமது எச்சரிக்கையை நமது அமைச்சர்கள் செவிமடுக்க மறுக்கிறார்கள்! நமது அறிவுரையை காது கொடுத்து கேட்க எவருமே முன் வருவதில்லை!

உலகத்தைப் பற்றியே கவலைப் படாமல், கால நிகழ்ச்சிகளைப் பற்றி கொஞ்சமும் சிந்தித்துப் பார்க்காமல்—அடக்கு முறைகளை மட்டுமே நம்பிக் கொண்டு வாழ்வது நல்லது தானா? நம்முடைய அமைச்சர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

இந்த இருபதாம் நூற்றாண்டில் எவருக்கும் எவருமே அடிமையில்லை! உலக மெங்கும் விடுதலை உணர்ச்சி கொழுந்து விட்டெறிய ஆரம்பித்து விட்டது! இந்த உணர்ச்சியை அழிக்க, ஒழிக்க. கட்டுப்படுத்த எந்த சக்தியாலுமே முடியாது!

இந்த வரலாற்றுச் சுவடியை நமது அமைச்சர்கள் படித்திருந்தால் நம்மை அடக்க, நமது இலட்சியத்தை இழித்தும் பழித்தும் பேச ஒரு நாளும் முன் வர மாட்டார்கள்!

"தென்னாடு—தனி இனம்! அது திராவிட இனம்! அந்நாம் அடிமையில்லை" என்று இலட்சக் கணக்கான இளைஞர்கள் உரிமை முழக்கம் செய்து வருகின்றார்கள்!

"எங்கள் மொழி, தமிழ் மொழி—அதுவே எங்கள் ஆட்சி மொழி' என்று வெற்றி முழக்கம் செய்து வருகின்றோம்!

ஆட்சியாளர்களோ நம்மை அலட்சியம் செய்கிறார்கள்—அடக்கு முறைகளைக் கொண்டு ஒடுக்க முன் வருகிறார்கள்!

வெள்ளைக்காரன் அடக்கிப் பார்த்தான், ஒடுக்கிப் பார்த்தான், சுட்டுப் பார்த்தான், உயிரைக் குடித்துப் பார்த்தான்—என்றாலும் இந்தியா விடுதலைப் பெறத் தான் செய்தது!

இந்த வரலாறு, இந்த வீர வரலாறு, இந்த உணர்ச்சி வரலாறு எங்களை எழுச்சி பெற வைக்கிறது! அடக்கு முறை என்ன செய்ய முடியும்—உங்களைத் தான் வெள்ளைக் காரனுடைய அடக்குமுறை என்ன செய்தது!

நீங்கள் செய்த உப்பு சத்தியாக்கிரகத்தைப் பார்த்திருக்கிறோம்—அதிலே வெற்றியும் பெற்றிருக்கிறீர்கள்—அதையும் பார்த்திருக்கிறோம்! நீங்கள் செய்த ஆகஸ்டு கலவரத்தைப் பார்த்திருக்கிறோம்—அதிலே வெற்றியும் பெற்றீர்கள்—அதற்காக நிலமும் வாங்கினீர்கள்—அதையும் பார்த்திருக்கிறோம்!

உங்களுக்கு அவைகளிலே வெற்றி என்றால் எங்களுக்கு மட்டும் வெற்றி கிடைக்காதா?

உங்களுடைய உணர்ச்சி, உங்களுடைய உத்வேகம், உங்களுடைய போராட்டம் எங்களுக்கு உர மூட்டுகிறது, தைரியமும் ஏற்படுத்துகின்றது—உங்களைப் போல் வெல்லுவோம், நிச்சயமாக வெல்லுவோம்—விடுதலையைப் பெறுவோம்!

பத்துப் பதினைந்து ஆண்டு காலத்திற்கு முன்பு வெள்ளைக்காரனுடைய "யூனியன் ஜாக்' கொடி பறந்த கம்பத்திலே—எத்தனை வெற்றிக் களிப்போடு, எத்தனை பெருமையோடு உங்களது அசோக சக்கர கொடி பறக்கிறது! எங்களுடைய இருவண்ணக் கொடி மட்டும் பறக்காதா? நீங்கள் வெற்றி பெற்றீர்கள்—உங்களுடைய வெற்றி எங்களுக்கு உற்சாக மளிக்கிறது—எனவே நாங்களும் வெற்றி பெறுவோம்-கொடியை பறக்க விட்டு மகிழ்வோம் !

ஆனல், உங்களைப் போல் தண்டவாளத்தைப் பெயர்த்து, தந்திகம்பிகளை அறுத்து, தபால் நிலையங்களை கொளுத்தி, நாட்டிலே பயங்கர நிலையை உருவாக்கிட எங்களுக்கு மனம் இடம் தரவில்லை. எனவே தான் அமைதியைக் கடை பிடித்து. சமாதானத்தை நிலை நாட்டி நாட்டை பெற நினைக்கிறோம்!

இந்த எண்ணம் எங்களுக்கு மட்டும் இருந்தால் போதாது—உங்களுக்கும் வர வேண்டும்! உடனடியாக வரவேண்டும்—காலம் கடந்து வந்தால் அது பயனற்றதாகிவிடும்!

அறிவுலக மேதை எங்கள் அறிஞர் அண்ணா உங்களை சமாதானத்திற்கு அழைக்கிறார்! உலகம் இருக்கும் சூழ்நிலையைக் காட்டி "அங்கே செல்லாதீர்கள்" என்று உங்களை வேண்டி வேண்டி அழைக்கிறார்! எங்கள் பெருந்தகை அறிஞர் அண்ணா தான் உங்களை அழைப்பார்—"சமாதானம, சமாதானம்" என்று வேண்டுவார்! அவருக்குப்பின் நிச்சயமாக இந்நிலையை நீங்கள் எதிர் பார்க்க முடியாது!

எங்களைப் பிடித்து பிடித்து வைக்கிறார் கூண்டுக்குள் அடைத்து அடைத்து வைக்கிறார்! உணர்ச்சியை, உள்ளத்தில் எழுந்துவிட்ட துடிதுடிப்பை எத்தனை நாளைக்குத் தான் கட்டுப்படுத்த முடியும்!

தயவு செய்து ஒரு முடிவுக்கு வாருங்கள்! நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துங்கள்!

உலகம் எங்கும் வெண் புறாவை உயர பறக்க விட்டுக் களிக்கும் ஆசியாவின் ஜோதி, அகிலம் புகழும் பண்டிதருக்கு இங்குள்ள நிலையை விளக்கிட வேண்டும!

நமது முதலமைச்சர் கனம் காமராஜருக்கு நம்மைப் பற்றி அதிகமாகத் தெரியும்! தெரிந்ததை மறைக்காமல், ஒளிக்காமல் நேரு பண்டிதருக்கு எடுத்துச் சொல்லி நல்ல நிலையை உண்டாக்கித்தர வேண்டும!

அண்ணாவை நேசித்தால், எங்கள் அண்ணாவை அணுகினால் நிச்சயமாகத் தென்றல் வீசும்! இல்லையேல் புழுதிக் காற்று தான் வீசும், புயல் தான் அடிக்கும்! நாட்டிற்கு எது தேவை என்பதை நமது அமைச்சர்கள் உடனடியாக முடிவு செய்ய வேண்டும்!

உருசேவ் சமாதானத்தைவிட நமக்கு இது முக்கியமானது! உலகப் பெருந்தலை மாநாட்டை விட இது நமக்கு அவசியமானது!

திராவிடத்தில் பெருந் தலைவர்களைக் கூட்டுங்கள்—அமைதியை நிலை நாட்டுங்கள்—தென்னாட்டை விடுவித்துக் கொடுங்கள்!

பெரியார் பிரிவினையை விடவில்லை! அதைத் தீவிரமாக்கவே [தீ] பந்தத்தை கையில் பிடித்து விட்டார்!

இதை மறுப்பவர்கள் அரசியல் பித்தலாட்டக்காரர்கள்!

(அண்ணா பேச்சு)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கூட்டங்களில் மாநில சர்க்கார் செய்யாததைப் பற்றிக் கூறுவதா? மத்திய அரசினர் மாநில அரசினர் கூறியதை ஒதுக்கி விட்டதைக் கூறுவதா, நமது மக்களுக்கிருந்து வரும் தொல்லைகளை எடுத்துவிளக்குவதா? மாநகராட்சிமன்றத்தில் நாம் செய்த பணிகளைக் கூறுவதா? அதை மாநில துரைத்தனத்தார் அலட்சியப் படுத்தி வருவதைப்பற்றிக் கூறுவதா? நம்முடைய மொழிக்கும், நாகரீகத்திற்கும் வந்துள்ள ஆபத்தைப்பற்றிக் கூறுவதா எதைக் கூறுவது, எதை விடுவது

இன்று நாட்டில் பல விஷயங்களைச் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்,

அதற்காகத்தான் நமது தோழர்களிடம் நான் எனது ஆசையை, விருப்பதை எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கூறுவதை நடைமுறையில் செய்தால் நமக்கு நல்ல ஆதரவு கிடைக்கும். மக்களைச்சந்திக்கும் வாயப்பும் கிடைக்கும். தேர்தல் காலங்களில் நமது கழகத் தோழர்கள் ஒவ்வொரு வட்டத்திலும், தெருவுத் தெருவாக, வீடு வீடாகச்சென்று மக்களைச் சந்தித்து ஓட்டு கேட்டோமோ, அவர்களின் ஆதரவுகளைக் கேட்டோமோ அதே போன்று நகரில் ஒருவாரத்தை ஏற்படுத்தி நகரமன்றத்தில் நமது கழகம் சாதித்ததைச், சாதிக்கவிருப்பதை, முன்னாலிருந்தவர்கள் செய்யாததை, மாநில அரசினர், மக்களின் நன்மைக்காக நகரமன்றத்தில் நமது தோழர்கள் செய்து வருவதற்கு ஆதரவு தராதிருப்பதை அறியும்படி செய்யவேண்டும்.

தெருத்தெருவாகச் சென்று ஒரு வீட்டில் அந்தப்பகுதியிலுள்ள பெரியவர்களையும், வாலிபர்களையும் தாய்மார்களையும், அழைத்து "எங்கள் தோழர்கள் நகரமன்றத்திற்குச் சென்றபின் இன்னின்னது செய்திருக்கிறார்கள், குடி தண்ணீருக்காகச் செய்துள்ள திட்டமிது, வரிவிஷயத்தில் இதைச் செய்திருக்கிறோம், பணக்காரர்களுக்கு வரி போடாதிருந்ததைக்கண்டுபிடித்து வரி விதித்திருக்கிறோம், ஏழைகளுக்காக இன்னின்ன வரிகளைக் குறைத்திருக்கிறோம், சர்க்கார் இந்த, இந்த இடைஞ்சல்களை செய்திருக்கிறார்கள் என்பதை புள்ளி விபரங்களுடன் கூற வேண்டும்.

இதை நாம் மக்களிடம் கூறினால், காங்கிரசார் கூட்டங்களில் நம்மைப்பற்றி என்ன குறைகள் கூறி தூற்றினாலும் நமக்கு அதனால் கேடு வந்துவிடாது.

நாம் செய்ய வேண்டியதை நல்லமுறையில் செய்து விட்டால் — கூறுவதை மக்கள் உணரும்படி கூறிவிட்டால் அதற்குப்பின் யார் எதைக் கூறினாலும் அதனால் நாம் அழிந்துவிடமாட்டோம்.

ஒரு தெருவிலுள்ள மக்களை ஒருவீட்டில் கூடும்படி செய்துவிட்டு, அவர்கள் கூறுங் குறைகளையெல்லாம் கேட்டு, அதற்கு நமது தோழர்கள் செய்துள்ள பணிகளையும் கூறிவிடுங்கள், அதற்குப் பின் பாருங்கள் நமது கழகத்திற்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறதென்று

ஒரு கூட்டத்தில் கால் மணி நேரம் பேசுவதைவிட, மணிக் கணக்கில் எடுத்து விளக்குவதைவிட இது நல்ல பலனை நமக்குக் கொடுக்கும் இதைத்தான் நான் விரும்புகிறேன், இதை நமது தோழர்கள், நமது கழகங்கள் செய்யவேண்டும். இப்படிச் செய்தால் எனக்குப் பெருமையையும், மகிழ்ச்சியையும் கொடுக்கும்.

பொய் என்றும் நிலைக்காது. பொய்சொல்லி ஒருவரை ஒரு நாளும் அழிக்கமுடியாது, நல்ல தொண்டுதான் என்றும் நன்மை செய்யும். ஆகவே பயனுள்ள தொண்டை உடனே ஆற்றுங்கள்,

நகர மன்றத்தில் நமது தோழர்கள் செய்துவரும் பணிகள் ஒரு சமயத்தில நகைப்புக்குரியதாகவும், அதே நேரத்தில் பயனுள்ளதாகவுமிருக்கிறது. நமது நண்பர் முனுசாமி செய்த ஒரு காரியத்தைப்பார்த்தால் நகைப்பாகவிருந்தது, திருமணமண்டபம் ஒன்றிற்குக் கால்கோல் விழாவை, திருமணமாகாத அமைச்சர் காமராசரைக் கொண்டு செய்திருக்கிறார். இந்த செய்தியைப் பார்த்தபின் எனக்கு நகைப்பே வந்து விட்டது. ஆனால் அதே நேரத்தில் காங்கிரசாரே நாம் மக்களின் நலனுக்குச் செய்யும் நல்ல பணியையும் உணரும்படி செய்தவர்களாகவும் ஆகியிருக்கிறோம்.

ஆகவே நமது நண்பர்களை இம்மாதிரி நல்ல பணிகளில் ஈடுபடும்படி வேண்டுகிறேன்.

நான் பேசும்போது குறிப்பிட்டேன். கூட்டத்தில் நாம் காங்கிரஸ் ஆட்சியில் நம்மக்கள் படும் துயரங்களையும், நமது மக்களின் நலனில் மாநிலஅரசினர் அக்கரையில்லாதிருப்பதையும். மத்திய அரசினர் மாநில அமைச்சர்களையும், நம்முடைய நாட்டையும் புறக்கணித்து வருவதையும் மக்களுக்குச் சொல்ல வேண்டிய நிலையிலுமிருக்கிறோமென்று நம்முடைய மனதில் பல பிரச்சனைகள் அலைமோதிக்கொண்டிருக்கிறது, எதை விடுவது, எதைக் கூறுவது என்பதுதான் இன்று நமக்கிருக்கும் நிலை.

பல பிரச்சனைகளை மக்கள் உணர்ந்து கொள்ளும்படி நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்று உலகத்தில் நடக்கும் நிலைமைகளையும், நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் சூழ்நிலைகளையும் நாம் மக்களிடம் கூற வேண்டும்,

இன்றைய ஆட்சியால் நமது மக்களும்; நாடும் அடைந்துவரும் அல்லல்களையும், நமது துரைத்தனத்தார் அலட்சியப் படுத்துவதையும் விளக்க வேண்டும்.

இன்று உலகத்தில் பலநாடுகள் விடுதலை அடைந்து வருவதையும், அங்கு மக்கள் அடைந்து வரும் விடுதலை உணர்ச்சியை விளக்க வேண்டும்.

இன்றுநமது நிலைஎப்படி இருக்கிறதென்றால் ஒரு வீட்டில் கல்யாணம் செய்பவனுடைய நிலையிலிருக்கிறோம், கல்யாண வீட்டுக்காரனுக்கிருக்கும் மன அலைமோதலும், மனநிம்மதியற்ற நிலையும், மனதில் ஊசலாடிக்கொண்டிருக்கும் எண்ணங்கள் தான் நமக்கும் இருந்து கொண்டிருக்கிறது.

"திருமணம் நடைபெற வேண்டிய நேரம்காலை 3மணியிலிருந்து 5மணிக்குள் நடக்க வேண்டும்".

முகூர்த்த நேரம் நெறுங்க, நெறுங்க அவனுக்குப் பல பிரச்சனைகள் மனதில் தோன்றுகிறது.

2 மணியிலிருந்தே அவன் பல காரியங்களைச் செய்யத் தொடங்குகிறான்,

தன்னுடைய மூத்த மகள் காட்பாடியிலிருக்கிறாள், அவள் வருவதைப் பற்றிய தகவலுமில்லை; கடிதமே வரவில்லை. அவள் எந்த வண்டிக்கு வருகிறாள் என்பதைத் தெரிந்து கொள்ள டெலிபோன் செய்து வரும்நேரத்தைஅறிந்து கொள்ள வேண்டிய காரியம் செய்கிறார்.

மாப்பிள்ளைக்குத் தைக்க வேண்டிய புதுத்துணியைக் குறிப்பிட்ட தையற்காரனுக்குக் கொடுக்கும்படி எழுதியிருப்பதால் அதைக் கொடுத்துதைக்கும் வேலையைக் கவனிக்கிறார்.

சமையல் செய்கிறவன் வந்திருப்பவனுக்கு வேண்டிய பொருள் கொடுப்பதைப் பற்றி யோசிக்கும் வேலையும், முன்பொரு கல்யாணத்தில் உப்பு அதிகமாகக் கொடுத்ததால் அவன் உப்பையே அதிகமாக அவன் உபயோகப்படுத்தியதால் அதைப் பற்றிக் கவனிக்க வேண்டியதைக் கவனிக்கும் வேலையும்.

இளையமகள் காலை வண்டிக்கு வருவதற்கு ரயிலடிக்கு வண்டி அனுப்புவதைப்பற்றி கவனிக்கும் வேலையும்.

சின்னப் பையன் கச்சேரி வைக்க வேண்டுமென்று வற்புறுத்துவதும். அதற்கு சீர்காழி கோவிந்தராசனை அழைக்க வற்புறுத்துவதை நிறைவேற்ற அந்த வேலையைக் கவனிக்கும் வேலையும்,

இரண்டாவது மகள் தனக்கு மங்களூர் வளையல் செய்து கொடுகக வேண்டுமென்று வம்பு செய்து ஒற்றைக் காலில் நின்று ஆசாரியிடத்தில் கொடுத்தை வாங்குவதுபற்றிய வேலையும்.

தாலி செய்யக் கொடுத்தது இன்னும் கொண்டு வநது கொடுக்காமலிருப்பதை வாங்க வேண்டியதைப் பற்றிய வேலையும்,

கல்யாணச் செலவிற்காக கடன் கேட்டிருக்கும் இடத்திலிருந்து ஆயிரம் ரூபாய் தான் வந்திருக்கிறது. மீதி ரூபாய் வாங்க வேண்டிய வேலையும், இன்னும் கல்யாணத்திற்கான பல வேலைகளையும் கவனிக்க வேண்டியிருககிறது.

இது பிள்ளைகளைப் பெற்றவர்கள் செய்ய வேண்டிய அவசியமான வேலைகளாக இருக்கிறது.

மேற் சொன்னவைகளை எதை விடுவது, எதைத் தள்ளிவிடுவது இதைப் போன்று தான் நமக்கும் இன்று இருந்து வருகிறது.

இந்தியை அரசியல் மொழியாகக் கொண்டு வந்து வடவரின் ஆதிக்கத்தை நிலை நிறுத்த செயயும் காரியத்தைச் சொல்ல வேண்டும்.

மாநில துரைத்தனத்தார் உச்ச வரம்பு சட்டத்தைக் கொண்டு வந்து சட்ட மன்றத்தில் சட்டமாக்கப்பட்டிருக்கும் நிலையையும் அவர்கள் அதை எந்த நிலைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி மக்களுக்குச் சொல்ல வேண்டும்.

மாநகராட்சி மன்றத்தில் மாநில அரசினரின் ஏதேச்சாதிகாரத்தைப் பற்றி செய்த மாநில அரசினரின் போக்கைக் கண்டித்து பேசினால், சட்டமன்றத்தில், மாநகராட்சி மன்றத்தின் மீது ஒழுங்கு நடவடிக்கை கொண்டு வந்திருப்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேணடியிருக்கிறது.

நாம் இது போன்ற இன்றைய நிலைகளை—நாட்டில் நடந்து வரும்

(4ம் பக்கம் பார்க்க)

மாநில அரசு அதிகாரமற்ற அரசு !

அதை மாற்றவே நம் கழகம் பாடுபடுகிறது !

(அண்ணு பேச்சு)
(3-ம் பக்கத்தொடர்ச்சி)

நிகழ்ச்சிகளை நாம் கூற வேண்டிய நிலையிலிருக்கிருேம்.

நாம் கல்யாண வீட்டுக்காரர்கள், சாவு வீட்டுக்காரர்களல்ல. சாவு வீட்டுக்காரர்களாக இருந்தால், சவத்தை அடக்கம் செய்வதற்குத் தேவையான பொருள்களை வாங்கி வந்து பிணத்தை அடக்கம் செய்துவிட்டு வந்துவிடுவார்கள்.

கல்யாண வீட்டுக்காரர் நிலை அப்படி அல்ல. அவர்கள் பல விஷயங்களைச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. பலவற்றைக் கவனிக்க வேண்டியிருககிறது.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்ருல், காங்கிரஸ்காரர்கள் இன்று சாவு விட்டுககாரர் நிலையிலிருக்கிருர்கள் அவர்கள் எது வேண்டுமானுலும் பேசலாம், எது வேண்டுமானுலும் செய்யலாம்.

இன்று நமது ஆட்சியாளர்களிடத்தில, மககளின் நன்மைககான எது கூறினுலும் மறுக்கிருர்கள், அவர்கள் நல்வாழ்வுககான திட்டங்கள் எதுவும் செய்வதில்லை. அதில் அககரையுமில்லை. அதற்கான அதிகாரமுமில்லை,

இன்று ஆட்சியின் நிலை, எப்படி இருக்கிறது, உணவு நிலையை சரிப்படுத்து என்ருல் செய்வதில்லை,பாலங்கள் கட்டு என்ருல் இல்லை, தொழில் நிலையங்கள் ஏற்படுத்து என்ருல் இல்லை. குடி தண்ணீர் விஷயமாக கவனி என்ருல் இல்லை, மக்களின் வாழ்வுக்கான வகைகளை செய் என்ருல் அதுவுமில்லை. "பணம்" என்ருல் "கொடு" என்று சொல்கிருர்கள் ஆனல் நாட்டுமக்களிடம் அமைச்சர்கள் என்ன பேசுகிருர்கள்.

"இநத நாடு சுதந்திரமடைய காங்கிரஸ்பாடுபட்டது காந்தியார் சத்தியாக்கிரகம் செய்தார் சிறை சென்ருேம் இந்தநாடு விடுதலை அடைந்தது அன்னியனை வெளியேற்றியது காங்கிரஸ். நாங்கள் அதைச்செய்தோம் இதைச் செய்தோம் கொடுங்கள் வரியை ஜெய்ஹிந்த்" என்று பேசி கையை நீட்டுகிருர்கள்.

நாம் அப்படிப் பேசி விட்டுப்போக முடியாது. நாம் பலபிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிருேம்.

நான் இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு முன் பத்திரிகையில் ஒரு செய்தியைப் படித்தேன். அதைப்பார்த்ததும் வேதனைப்பட்டேன்.

பெரியார் இராமசாமி அவர்கள் தமிழ்நாடு தனியாகப்பிரியவேணடுமென்பதற்காக இந்திய தேசப்படத்தை தமிழ்நாட்டை நீக்கி கொளுத்தப்போவதாக அறிவித்து ஓர் போராட்டம் துவக்கியிருககிருர். அதற்கு ஐந்தாம் தேதியையும் நிர்ணயித்திருந்தார்.

அன்று ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, ஓர் இடத்திற்குச் சென்று கொளுத்துவதென்று முடிவு செய்திருந்தார்கள்.

இதற்கு காமராசர் அரசினர் தடை விதித்திருக்கிருர்கள்.

ஜனநாயகம் பேசிவரும் இந்த ஆட்சியில் தங்களது வெறுப்பை—தங்கள் எண்ணத்தைக்காட்டுவதற்கும் தடையா?

காமராசர் சர்க்காரை ஒழிப்பதற்கோ? காமராசர் ஒழிக என்று கூறிக் கொண்டோ ஊர்வலம் வர மாட்டார்கள் ஏனெனில் கர்மரசாருக்கும் பெரியாருக்கும் அல்லவா நெருங்கிய தொடர்பு உண்டு. காமரசர் சர்க்கார் ஆட்சியில் இருக்க வேண்டும் காமராசர் ஒரு பச்சைத்தமிழர் அவர் ஆட்சியில் நிலைத்திருக்க வேண்டுமென்று பெரியார் கூறி வருகிருர், அப்படி இருக்கும் போது அவர் ஊர்வலத்திற்கு ஏன் தடை விதிக்க வேண்டும்,

பெரியார் நடத்தும் ஊர்வலத்தில் காமராசர் ஆட்சி ஒழிக என்று கூறமாட்டார்கள், வேண்டுமானல் "காமராசர் வாழ்க" காமராசர் ஆட்சி நீண்டநாள் இருக்க வேண்டுமென்றுதான் முழக்கமிடுவார்கள். அப்படிப்பட்ட ஊர்வலத்திற்கு காமராசர் சர்க்கார் ஏன் தடை விதிக்கிறது பெரியார் வாழ்க தமிழ்நாடு தமிழருக்கே என்றுதான் முழக்கமிடுவார்கள், அப்படியிருந்தும் ஊர்வலத்திற்குத் தடை விதிப்பதைப் பார்த்தால் எதிர் கட்சிகளின் எண்ணங்களை எதிரிகளின் குரல்களை மக்கள் கேட்கக் கூடாது என்றுதானே அரசினர் நினைக்கிருர்கள்,

மக்கள்முன் எதிர்க்கட்சிகளின் குரல்கள் கேட்கப்பட்டால் இவர்களின் செய்கைகளை மக்கள் தெரிந்து கொள்வார்கள். ஆட்சியின் கொடுமைகள், இவர்கள் செய்துவரும் தவறுகள் அம்பலப்படுத்தப்படுவார்கள் என்று தானே அர்த்தம். காமராசரை வாழ்த்தினுலும் காமராசரைப்புகழ்ந்தாலும் தடை இருக்கிறது என்பதுதானே பொருள்.

இதை வளரவிடக்கூடாது இப்படித்தடை விதிப்பது ஜனநாயக்கத்திற்ஒப் புறம்பானது இதைப்பற்றி திராவிடர்கழகம் ஒரு முடிவுககு வரவேண்டும். அந்தக் கழகம்தான் இதையோசிக்க வேன்டும். இந்த தடையை மீறவேண்டும்.

நான் இப்படிக் கூறுவதால் நான் அடுத்தவீட்டுப் பிள்ளையைத்தூண்டி விட்டு வேடிக்கைப்பார்க்கிறேன் என்று எண்ணக்கூடாது இந்தமாதிரியாள செய்கைகள் வளரவிடக்கூடாதென்பதற்காகவே இதைக் கூறுகிறேன்.

இதை இப்படியே வளரவிட்டால் நமது உரிமைக்கு—தன்மானத்திற்கு பங்கம் ஏற்படுமென்றே இதைக் கூறுகிறேன்.

நான் இப்படிக் கூறுவதால் நான அடுத்தவிடடுப் பிள்ளையைத் தூண்டிவிட்டுவிட்டு வேடிக்கைப் பார்க்கிறேன் என்று யாரும் எண்ணக்கூடாது.

நம்முடைய கழகத்திற்கு பெரியார் முறைப்படி அழைப்புக் கொடுத்திருந்தால் பொதுக்குழுவிலோ, நமது செயற்குழுவிலோ முடிவுசெய்து இதற்கு ஒரு முடிவு கண்டிருக்கலம்.

திராவிட முன்னேற்றக் கழகம் இதற்கெல்லாம் பயப்பட்டு விடாது.

பண்டித நேருவுக்குக் கருப்புக் கொடி பிடிப்பதென முடிவெடுத்தோம், அதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்வதற்காக கடற்கரையில் ஒரு கூட்டம் நடத்துவதற்கு அரசினரிடம் அனுமதி கேட்டோம், அரசினர் மறுத்தார்கள் கூட்டத்திற்குத் தடை போட்டார்கள், அந்தத் தடையை மீறினேம், அதனல் ஏற்பட்ட தொல்லைகளை ஏற்ருேம்,

நாம் அதை அனுபவித்ததால் தான் இதைக் கூறுகிறேன்.

குழந்தையைப் பெற்றவளுக்குத்தான் பிள்ளைகள் வைத்தியம் தெரியும், பிள்ளைகளைப் பெருத மலடிக்குத் தெரியாது, அதைப் போல் தான் நான் இதிலுள்ள கஷ்டங்களைத் தெரிந்து தான் கூறுகிறேன்.

பெரியார் நாட்டுப் பிரிவினையை விட்டு விட்டார், நான் விடாது கூறிக்கொண்டு வருகிறேன என்று காமராசர் கூறுவது அரசியல் பித்தலாட்டம்.

பெரியார் பிரிவினையை தீவிரமான முறையில் செய்கிருர். அதன் அறிகுறிதான் தேசப்படத்தைக் கொளுத்துவது.

இதைப் புரிந்து கொள்ளாது காமராசர் கூறி வருவது அரசியல் பித்தலாட்டம் இந்த மாதிரி அபத்தமான பேச்சுக்களைக் காமராசர் பேசாமலிருக்க வேண்டும்.

இன்று நாட்டில் நடந்து வரும் நிலைமைகளைக் காமராசர் அறிந்து கொள்ளாத நிலையிலிருக்கிருர்.

மாநில அரசுக்கு மத்திய சர்க்கார் எந்தவித உரிமையும கொடுக்காது அடிமைப்படுத்தி வருவதை இந்த நாடடிலுள்ள எல்லா எதிர் கட்சிகளும் எதிர்ககின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் மத்திய சர்க்காரின் எதேச்சாதிகாரத்தைக்கண்டிக்கவில்லை, பல கட்சிகளும் கண்டிக்கின்றன

எனது நண்பர் மா. பொ. சிவஞானம் மாநில அமைச்சர்களுககு நிறைய அதிகாரங்கள் கொடுகக வேண்டுமென்றும், அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறிவருகிருர்.

கம்யூனிஸ் கட்சியும் தங்கள் கட்சிக்கூட்டத்தில் மாநில சர்க்காரின் நிர்வாகத்தில் மத்திய அரசினர் தலையிடக்கூடாதென்று தீர்மானித்திருக்கிருர்கள்.

சோஷியலிஸ்ட்கட்சியும் மாநிலததின் மீது மத்திய ஆட்சி தலையிடுவதைக் கண்டித்திருக்கிறது.

பிரஜாசோஷிலிஸ்டுக் கட்சியும் கண்டிக்கிறது,

சுதந்திரக்கட்சி தலைவர் ஆச்சாரியாரும் மாநில சர்க்காருககு ஒரு முனிசிபாலிட்டிக்கு, பஞ்சாயத்து சபைக்கு இருக்கும் உரிமை கூட இல்லை. அதன் உரிமைகளிலும், அன்ருட பணிகளிலும் மத்திய சர்க்கார் தலையிடுகிறது என்று கண்டித்திருக்கிருர்.

இது போன்று டில்லி அரசினரின் போக்கை எல்லா அரசினரும் கண்டிக்கிருர்கள.

இதை நேரு சர்க்கார் அலட்சியபடுத்தி வருகிறது, ஜனநாயமம் பற்றி மேடை

[9 ம் பக்கம் பார்க்க)

வடநாட்டைக் காக்கவே ராணுவத்தைப் பெருக்குகிறார்கள்!

பிரிந்தால் வாழ முடியாதென்பவர்கள் வரலாறு அறியாதவர்கள்!

இந்தியா என்று ஒன்றாக இருந்தது!

பிரிவினையை எதிர்ப்போருக்கு பொதுச் செயலாளர் நாவலர் தரும் நல்லுரை!

சென்னை 58-வது வட்டம் பகிர்சாகிப் 3-வது தெருவில் 25-5-60ம் நாள் எம். ஜி. ஆர். கலை மன்றத்தின் முதல் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாத் துவக்கத்திற்கு முன்பு பல இயக்கத்தோழர்கள் இயக்கப் பாடல்களைப் பாடினார்கள். அவ்விழாவிற்கு திராவிடமணி தலைமை வகித்தார். தோழர்கள், நா. சுந்தரம், எம். கே. சாமி, தம்பித்துரை ஆகியோர்கள் கழகக் கொள்கைகளைப்பற்றியும், மாற்றாரின் தூற்றுதலைப்பற்றியும் பேசினார்கள். 58-வது வட்ட நகரமன்ற உறுப்பினர் திரு. சிட்டிபாபு அவர்கள், நகரமன்றத்தில் நம் தோழர்கள் செய்து வரும் பணியினைப்பற்றியும் வடநாட்டு ஆட்சியைப்பற்றியும் விளக்கமாகப் பேசினார்.

பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நீண்ட கையொலிகளுக்கிடையேயும், ஆரவாரத்திற்கிடையேயும் பேசியதாவது:

அவைத்தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய பெரியோர்களே! அன்புகெழுமிய தோழர்களே! தாய்மார்களே!!

இன்று 58-வது வட்டத்துத் தோழர்கள், எம். ஜி. ஆர். கலை மன்றம் ஒன்றை நிறுவி, திராவிட முன்னேற்றக்கழக கொள்கைகளை பரப்பி வருகிறார்கள் அவர்கள் ஓராண்டுகாலமாக ஆற்றிவரும் சீரிய பணிகண்டு—நண்பர்கள் ஆர்வத்துடன் ஆற்றி வரும் நல்ல செயல்களைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன் பூரிப்படைகிறேன், பெருமைப்படுகிறேன்.

இந்தவட்டத்தில் நமது கழகப் பணிகளை நல்லமுறையில் ஆற்றி வரும் உணர்ச்சிமிக்க பெரியவர்களுக்கும், எழுச்சிகொண்ட வாலிபத்தோழர்களுக்கும், ஆர்வத்தோடு பண்பாடும் பணியாற்றி வரும் மாணவத்தோழர்களுக்கும் எனது உளங்கனிந்த வாழ்த்துதலையும். பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாபெரும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பெரும் வாய்ப்புகிடைத்தமைக்கு அகமகிழ்கிறேன்.

நமது நண்பர் சிட்டிப்பாபு அவர்கள் நகரமன்றத்தில் தான் ஆற்றிய நற்பணிகளை எடுத்துக் கூறினார். நான் ஒரு குழுவில் கலந்து கொண்டதால் இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு காலதாமதமாகி விட்டது. அதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். மன்னித்து, மன்னித்து பழக்கப்பட்ட நீங்கள் இன்றும் மன்னிப்பீர்களெனக் கருதுகிறேன்.

நண்பர் சிட்டிப்பாபு அவர்கள் நம் கழகக் கொள்கைகளைப்பற்றியும்—வடநாட்டு ஆட்சியிலுள்ள கேடுகளைப்பற்றியும் நல்ல முறையில் பேசினார். இன்று பல காங்கிரஸ்காரர்கள் காங்கிரஸ் கட்சிக்கு போட்டி திராவிடமுன்னேற்றகழகம் என்று சொல்லுகிறார்கள். அப்படி அவாகள் நினைப்பதுபோல—அவர்கள் எண்ணுவதுபோல



நமது திராவிடமுன்னேற்றக்கழகம் காங்கிரஸ்கட்சிக்குப் போட்டி அல்ல. முதலில் பீடத்தில் இருந்தவனை இறக்கி நாம் போய் பீடத்தில் அமர நினைத்தால்தானே அது போட்டியாகும். நாம் ஆதிக்கம் செலுத்த நினைத்தால்தானே அது போட்டியாகும்.

உதாரணமாக ஒருவன் துவரம் பருப்புக்கடை வைத்திருக்கிறான், அதே இடத்தில் மற்றவன் துவரம் பருப்புக்கடை வைத்தால்தானே அது போட்டிக்கடையாகும். நாம் துவரம் பருப்பில் சத்துகிடையாது என்று சொல்லி உளுத்தம் பருப்பு கடைதானே வைத்திருக்கிறோம். நாம் துவரம் பருப்பு சத்தற்ற பொருளாகிவிட்டது என்று கூறுகிறோம். உளுத்தம் பருப்பு நல்ல, சத்துள்ள பொருள் என்று சொல்லுகிறோம். இது எவ்வாறு போட்டியாகும். நீங்கள் நினைப்பதுபோல் திராவிட முன்னேற்றக்கழகம் போட்டிக்கட்சி அல்ல இதை அருமை நண்பர்கள் உணராது அறியாது தவறான முயற்சியில் பேசிவருவது கண்டு நான் அவர்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர் காமராசர் மீதோ, சுப்ரமணியமீதோ, பக்தவத்சலம் மீதோ, அல்லது அவர்கள் பதவி மீதோ நமக்குப் பற்றோ, பாசமோ, ஆசையோ கிடையாது. ஆகவே உங்கட்குப் போட்டி நாங்களல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் "மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும். அவர்கள் படும் துயரம்—அவர்கள் அடையும் தொல்லைகள் நீக்கப்படவேண்டும் நாமே நமது நாட்டை ஆள வேண்டும்" என்றுதான் எடுத்துக் கூறுகிறோம்; நம்மை வட நாட்டான் அடிமையாக வைத்து நாம் கொடுக்கின்ற வரிப்பணத்தைக் கொண்டு வாழ நினைக்கிறான், நாம் அவர்களது பிடியிலிருந்து விலகி சுதந்திரத்துடன் வாழ வேண்டுமென்று கூறுகிறோம்,

நமது மாநில அமைச்சர்களுக்கு அரசியல் திறமோ, சுதந்திர எண்ணமோ, நாட்டின் விடுதலை உணர்ச்சியோ கிடையாது என்று கூறுகிறோம்.

நம்மை ஆளுகின்ற முதலமைச்சர் காமராசர் நம்நாட்டிற்கு நன்மை செய்யவேண்டுமென்று வடநாட்டானிடம், கேட்டாலும், கூவினாலும் — கொக்கரித்தாலும் வட நாட்டான் அலட்சியப்படுத்துகிறான்! இவராக எதுவும் செய்யும் உரிமைகிடையாது! அவன் அனுமதி பெற்றுத் தான் எதுவும் செய்ய முடியும் அதனால் வட நாட்டான் பிடியிலிருந்து அவன் ஆதிக்கத்திலிருந்து நாம் விடுபட வேண்டுமென்று சொல்லுகிறோம், இந்த மாநில அமைச்சர்களையும் அங்கு மதிப்பதில்லை! இவர்கள் சொல்லும் வார்த்தைக்கும் மதிப்பு கிடையாது என்று கூறுகிறோம்!

நமது முதலமைச்சர் காமராசர் எதற்கெடுத்தாலும் "பார்ப்போம்" என்பது போல வட நாட்டானும் நம் அமைச்சர்கள் கேட்பவைகளுக்கு "பார்ப்போம்" என்று சொல்லுகிறார்கள்! இந்த நிலைமை மாற வேண்டும்!

நமது நாடு பிரிந்தால் தான் நாம் ஆளும் நிலை ஏற்பட்டால் தான் அந்த நிலை ஏற்படும்!

அந்த நிலை ஏற்பட வேண்டுமென்று தான் பணியாற்றி வருகிறோம்!

இந்தியா ஒரு நாடு, அது பிரியக் கூடாது! பிரிந்து போக வேண்டு மென்று கூறுவதை ஒப்புக்கொள்ள முடியாது! என்று டில்லி அரசினர் கூறுகிறார்கள் அவர்களை நான் ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன்!

இந்தியா என்று ஒன்றாக இருந்தது! என்று இந்தியா ஒரு ஆட்சியின் கீழ் இருந்தது இதற்கு வரலாற்றுச்சான்றுகள் கூற முடியுமகா?

(8-ம் பக்கம்பார்க்க)

தேர்தல்புரி யாத்திரை

பி.எஸ்.இளங்கோ

முன் கதைச் சுருக்கம்

ஆத்தூர் ஜமீந்தார் தனசேகர பிள்ளைக்கு ஜமீன் பட்டம் போயிற்றே தவிர அவருக்கு ஏராளமான நிலபுலன்களும், கொழுத்த பணம், பெருத்த செல்வாக்கும் அழியாத வரம் பெற்றே இருந்தன! அவரை அந்த ஊர் மக்கள் "பெரிய பண்ணை" என்றே அழைப்பார்கள்! சிலர், ஜமீந்தார் ஐயா என்ற இந்த காலத்திலும் கூட சொல்லுவதுண்டு.

தனசேகரம் பிள்ளை கடைந்தெடுத்த கஞ்சன் தான் என்றாலும் காலநிலையையும் ஓரளவு உணர்ந்து நடப்பவர்!

சர்க்கார் நிலச் சீர்திருத்தம் கொண்டு வருவதாக உத்தேசித்த காலத்திலேயே இவர் அதை பரிபூரணமாக ஆதரித்து வந்தவர் தான்! பல பெரிய பணக்காரர்களோடு தினம், தினம் வாதாடவும் செய்வார்! காலம் வெகு வேகமாக மாறிக் கொண்டு வருகிறது! அந்த காலத்தோடு நாமும் மாறினால் தான் சௌக்கியத்தோடு வாழ முடியும் என்பதை தனசேகரம் பிள்ளை முற்றிலும் உணர்ந்திருந்தார்!

"நூறு வேலி, இருநூறு வேலி என்று நிலத்தை வைத்துக் கொண்டு இப்படிக் கூலிக்காரப் பசங்களோடு அல்லல் படுவதை விட, பட்டணத்தில் பெரிய பங்களாக்களை வாங்கிப் போட்டால் வாடகையாவது வரும்" என்று நினைப்பவர்!

அத்தோடு, "எல்லா தொழிலையும் விட அரசியல் தொழிலே மிக லாபகரமானது" என்ற எண்ணம் அவருக்கு எப்படியோ ஏற்பட்டு விட்டது! "ஒரு ஐந்து வருடத்திற்கு மந்திரி வேலைப் பார்த்தால் ஒரு ஐந்து தலைமுறைக்காவது சுகமாக வாழலாம்" என்று அவர் எண்ணத் தொடங்கினார்!

"மந்திரி வேலை அவ்வளவு சுலபத்திலா கிடைத்து விடும்! தேர்தலிலே நிற்க வேண்டும், படிப்பு வாசனையற்ற காட்டு மிராண்டி மக்களின் காலைப் பிடிக்க வேண்டும், பணம் என்று பாராமல் வாரி வாரி இறைக்க வேண்டும் இத்தனைக்கும் பிறகும் ஜெயிக்க முடியுமா?" மூன்று முறை தேர்தலிலே நின்று தோற்ற அனுபவம் அவரை இதையெல்லாம் யோசிக்க வைத்தது!

பணத்தால் பெறும் பதவியைப் பெற முடியாது, கொஞ்சம் எத்து வேலையும் செய்ய வேண்டும்! சர்க்காரே அதை செய்யும் போது தனசேகரம் பிள்ளை மட்டும் ஏன் அதைச் செய்ய மாட்டார்! அதையும் அவர் செய்ய ஆரம்பித்தார்— அதையும் என்பதை விட, அதையே அவர் செய்ய ஆரம்பித்தார்!

"சர்க்கார் உச்சவரம்பு கொண்டு வந்து நிலங்களை பிடுங்கிக் கொள்வதைவிட, அந்த நல்ல பெயரை சர்க்கார் சம்பாதித்துக் கொள்வதைவிட நாமே அதைசெய்து விட்டால் என்ன" என்று யோசித்தார், ஒரு முடிவுக்கும் வந்தார்!

தன் பண்ணையில் வேலை செய்து வரும் வேலையாள் சாத்தனுக்கு முப்பது ஏக்கர் நிலத்தை எழுதிக் கொடுத்து— ஊரிலே வள்ளல் என்ற பட்டத்தைப் பெற ஆசைப்பட்டார்!

"முப்பது ஏக்கர்! ஐயோ முப்பது ஏக்கர்!" என்று அலறினார்! அதற்கும் ஒரு வழியைக் கண்டு பிடித்தார்! சாத்தனிடம் எதிர்பாண்டு எழுதி வாங்கிக் கொண்டு நிலத்தை எழுதி வைப்பது என்று முடிவு செய்துக் கொண்டார்!

"இப்படி எழுதி வைத்தால் வள்ளல் என்ற பெயரும் கிடைக்கும் நமக்குடைய சொத்துக்கும் நஷ்டமில்லை' என்று நினைத்தார்! பட்டா தான் அவன் பெயருக்கு, அதிலே வருகிற பயனெல்லாம் இவருக்கு தானே?

தனசேகரப்பிள்ளை தன்னுடைய நிலத்திலே முப்பது ஏக்கர் நிலத்தை தன்னுடைய பண்ணையாள் சாத்தனுக்கு எழுதிக் கொடுத்தார்!

தனசேகரப்பிள்ளை செய்த மோசடி ஊர் அறியுமா? எதிர் பாண்டு வாங்கிக் கொண்டதும், அதிலே விளையும் நெல்லை இவரே எடுத்துக் கொள்ளுவதும் ஊர் மக்களுக்கு எப்படித் தெரிய முடியும்!

"வள்ளல் வாழ்க! பாரி வள்ளல் வாழ்க! சாண மகாராஜா வாழ்க" என்று எல்லோரும் வாழ்த்தினார்கள்! "அப்படியா இனி மந்திரி வேலை நிச்சயம்" என்று தனசேகரம் பிள்ளை தனது மனதுக்குள்ளேயே நினைத்துக் கொண்டார்!

முற்றும் துறந்த முனிவரைப் போல் ஊரெல்லாம் பேசித் திரியும் தனசேகரம் பிள்ளைக்கு மூன்றே மூன்று ஆசை தான் உண்டு! ஆயுள் காலத்திற்குள் ஒரு முறை மந்திரி வேலைப் பார்த்து விட வேண்டும். அதன் மூலம் ஏராளமான செல்வத்தையும், செல்வாக்கையும் சம்பாதிக்க வேண்டும், தன் அருமை மகள் சாந்தாவை பெரிய இடத்தில் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்பது தான் அவருடைய ஆசையாகும்!

தன் அருமை மகள் சாந்தா மீது அவர் உயிரையே வைத்திருந்தார்! சாந்தாவை விட்டு ஒரு நிமிடம் கூட பிரிந்திருக்க அவருக்கு மனம் வராது! என்றாலும் இப்போது தன் மகளை பட்டணத்திற்கு அனுப்பி டாக்டர் வேலைக்கு படிக்க வைத்தார்!

சாந்தா நல்ல அழகி! செக்கச் சிவந்த மேனி, சிரிப்புத் தவழும் முகம், முல்லைக் கொடி போன்ற உடலமைப்பு! சுருண்டு, சுருண்டு அலை கூட்டி நிற்கும் நீண்டு வளர்ந்த தொங்கும் கூந்தல் அவளுடைய அழகுக்கு கவர்ச்சியைக் கூட்டின!

அவளுடைய அங்கச் செழிப்புக்களைக் கண்டு அவளே ஒரு கலையை பூரித்து நின்றாள்! கருங்குவளை மலர் போன்ற அவளுடைய கண்கள் கண்டவர்களை யெல்லாம் கவர்ந்தன! பார்த்தவர்களை யெல்லாம் பரவசமூட்டின!

கிட்டாத ரோஜாவுக்கு வாசம் ஏது, கடிக்காத கரும்புக்கு ருசி தான் ஏது? அவளுடைய அங்கச் செழிப்பு இறைவனை மேலும் எண்ணிப் பார்க்கத் தூண்டிற்று!

தோட்டத்து முல்லையாலும் வண்டுகளை மயக்கத் தானே செய்யும்! தேனை மொண்டு குடிக்க எத்தனையோ வண்டுகள் பறந்தன!

ராஜன் கட்டழகன்—அதே கல்லூரியில் படிக்கும் மாணவன்! எப்படியோ அந்த கட்டழகி இந்தக் கட்டழகனை கவர்ந்து விட்டாள்! பருவம் எல்லாவற்றிற்கும் துணையாக நின்றது!

தினம், தினம் காதல் காவியங்களை வரைந்த வண்ணம், தினம் தினம் இன்ப காட்சிகளை படம் பிடித்த வண்ணம் காலத்தைக் கழித்தார்கள்! போனால் வராது பொழுது விடிந்தால் கிடைக்காது! இளமை எல்லோருக்கும் எப்பொழுதுமே சாசுவதமானது அல்ல என்ற தத்துவத்தை உணர்ந்து, இளமையை நன்கு பயன்படுத்திக்கொண்டார்கள்!

காலச்சிறுவன் நாட்களாம் கீதங்களை இசைத்துக் கொண்டே இருந்தான்! கல்லூரி பரீட்சையும் முடிந்தது! சாந்தா ஊருக்குப் புறப்பட்டாள்!

சாந்தாவும், ராஜனும் ஒரே ஊர்தான்! என்றாலும் ராஜனை முன்பின் தெரியாது! கல்லூரியில்தான் அவள் கண்டாள்!

ராஜனை யார் என்று அவள் அறிந்திருந்தால் இந்த பிணைப்பு ஏற்பட்டிருக்குமா? இளமைத் துடிப்புக்கு என்ன பேதம் வேண்டிக்கிடக்கிறது என்று எண்ணி இருப்பாளா? போகப்போகத் தான் தெரியும்!

பட்டணத்திற்குச் சென்று பட்டதாரியோடு திரும்பி வந்த மகளைக்கண்டதும் தனசேகரம் பிள்ளைக்கு ஒரே மகிழ்ச்சி! ஒரே இன்பம், ஒரே உற்சாகம்! "இனி நம்மை அசைக்க யாராலும் முடியாது" என்று கர்வத்தோடு பூரித்துக்கிடந்தார்!

இந்த நிலையில் உள்ளூர் புரோகிதர் சுட்டண்ணு அந்த ஊர் பெரிய மனிதர் வீட்டுப் பையன் ஒருவரை அழைத்துக்கொண்டு தனசேகரம் பிள்ளைவீட்டிற்கு வந்தார்!

அடுத்ததேர்தலில் அந்த பெரிய மனிதர் வீட்டுப்பையனே தேர்தலில் நிற்கப்போவதாகவும் மந்திரிவேலை தருவதாக மேலிடம் வாக்குக் கொடுத்திருப்பதாகவும், அதனால் சாந்தாவை அந்த பையனுக்கு திருமணம் செய்து கொடுக்கவேண்டுமென்றும் சுட்டண்ணு எடுத்துக் கூறினார்!

தனசேகரம் பிள்ளைக்கு இந்த வார்த்தை கடும் விஷமாக இருந்தது! வெகுண்டெழுந்தார்! "யார் மந்திரி என்பதை பார்த்து விடுகிறேன்" என்று கர்ஜித்தார்! சுட்டண்ணுவும் எதிர் சவால் விட்டுப் புறப்பட்டார்!

8

சுட்டண்ணுவையும் அந்த முதலியார் வீட்டுப்பையனையும் வெளியே அனுப்பிவிட்டு தனசேகரம் பிள்ளை பலமான யோசனையில் ஆழ்ந்தார்! பத்து பதினைந்து நிமிடம் வரையில் அவருடைய உள்ளம் எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்தது! "இனி யோசித்து என்ன பயன்—எனக்குக் குறுக்கே எவன் நின்றாலும் அவன் தலை துண்டம்! துண்டம்!! என்று உரக்கக் கூவிக் கொண்டே ஒரு ரூமுக்குள் நுழைந்தார்! 'பயல்களா? போடிப்பயல்களா? என்னையா எதிர்க்

கிறீர்கள்?: இதோ இருக்கும் இந்தத் தம்பிக்கோட்டை அரிவாளுக்கு பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்று கத்திக்கொண்டே ஒரு பெரிய கொடுவாளை எடுத்து அதன் கூர்மையைத் தடவிப்பார்த்தார்!

"நான்தான் இந்த ஊருக்குப் பெரிய மனிதன், நான்தான் தொண்டுதொட்டு தேசாபிமானம் படைத்தவன்! எனக்குப்பதவி இல்லை என்றால், எனக்குத்தேர்தலில் வேலை இல்லை என்றால், நான் பதில் சொல்லமாட்டேன்— இந்த கொடுவாள்தான் பதில் சொல்லும்'' என்று கூறிக்கொண்டே அரிவாளை ஓங்கி பக்கத்தில் கிடந்த மேஜையை பிளந்தார்! "பாரடா, பார்! இந்தமேஜையைப்பார்! அழகாகக்கிடந்த இந்த மேஜை அக்குவேர், ஆணிவேராக போய்விட்டது! உன்னுடைய வாழ்வும் இந்த கதியைத்தான் அடையும்'' என்று வாய் கிழிய கத்திப் பேசினார்!

"அப்பா என்ன இது?''— கண்ணுவாடா, மணிவண்ணுவாடா கட்டி முத்தம் தாடா என்று தன் கண்ணாளனின்படத்தை வைத்துக்கொண்டு காதல் கீதம் பாடிக்கொண்டிருந்த அவளுடைய உள்ளம் பதறிற்று! வெளியே ஓடிவந்தாள்! அப்பாவின் நிலையைககண்டுஉடல் நடுங்கினாள்!

"ஒன்றுமில்லை அம்மா! ஒருவனுடைய வாழ்வு மடிந்துவிட்டது!"

"என்னப்பா இது? மேஜையை ஏன் இப்படி பிளந்து விட்டீர்கள் என்று கேடடால் ஒருவனுடைய வாழ்வு முடிந்த விட்டது என்கிறீர்களே!" சாந்தா உலகம் தெரியாதவள் என்பதை தன் பேச்சின் மூலம் காட்டிக்கொண்டாள்!

"அந்த அற்பனுக்கு இது முன் அறிவிப்பு! இந்த மேஜை பிளந்து கிடக்கிறது அல்லவா— அதேபோல் அவனுடைய இதயமும் பிளந்துக்கிடக்கப்போகிறது என்று தனசேகரம் பிள்ளை ஆத்திரத்தை அக்கினிப்பிழம்பாக்கிக் கொண்டிருந்தார்!

சாந்தாவுக்கு ஒன்றுமே புரியவில்லை! ஒரு வேளை தன் விஷயம் தெரிந்துவிட்டதோ! அதனால்தான் இப்படித்துடித்து கிளம்புகிறாரோ என்று பதறினாள்!

"யார் மீது இப்படி கோபப்படுகிறீர்கள்?'' சாந்தா தன் தந்தைக்கு சாந்தத்தை ஊட்ட ஆரம்பித்தாள்!

"அவன்தான் எனக்கு வைரி! என் ஆசைக்கு வைரி, என் பதவிக்கு வைரி, என் அன்பு மகளுக்கும் வைரி!'' தனசேகரம் பிள்ளையின் கோபம் கொஞ்சம் கூட தணிந்தபாடில்லை!

"என்னப்பா இது?! விளங்கும்படி தான் சொல்லுங்களேன்! சாந்தா உள்ளத்தில் கவலைமட்டும் போகவே இல்லை!

என்னையும் பலி கொள்ள நினைக்கிறான், உன்னையும் பலி கொள்ள நினைகிறான்—ஒரு பாதகன்!

"அதனாலே..........அப்பா, அதனாலே......''

"அவனை பலி கொள்ளப் போகிறேன்! இந்தத்தம்பிக் கோட்டை அரிவாளுக்கு கூறு போடப்போகிறேன்!'' தனசேகரம் பிள்ளை தான் போட்டத்திட்டத்தை நிறைவேற்றுவதிலே கண்ணும் கருத்துமாக இருந்துவந்தார்!

சாந்தாவுக்கோ உலகமே சுழன்று கொண்டிருந்தது! உள்ளே போனாள்—படுக்கையில் படுத்தாள், விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்!

தனசேகரம் பிள்ளை மட்டும் சுழல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு இந்த நாற்காலியை சுழற்றுவதுபோல் உன் வாழ்வையும் சுழற்றுகிறேன் பார்'' என்று முணு முணுத்துக் கொண்டிருந்தார்!

வானம் இருள ஆரம்பித்தது! அவருடைய வாழ்க்கையும் இருளில் சரண்புகுமோ என்னவோ —யார்கண்டார்கள்!

(வளரும்)

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் தேரடி மைதானத்தில் 30–5-60ம் தேதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசிய சொற்பொழிவின் சென்ற வாரத் தொடர்ச்சி வருமாறு:

போர்க் கொடியை உயர்த்தும் நாள் நெறுங்கிவிட்டது!

நம்மை அடக்க அடக்குமுறைகள் தாண்டவமாடலாம்!

அண்ணாவின் போர்ப்பரணி!

இந்த நாட்டில் எதிர்கட்சிகளுக்குஇருக்க வேண்டிய மதிப்பு அளித்து அவைகள் கூறிவரும் குறைகளை நீக்கட்டும் இன்றேல் ரஷியாவிலும், சைனாவிலும் இருப்பது போன்று எதிர்கட்சிகளையே அழித்து விடட்டும்

இதை விடுத்து பேசுவது ஜனநாயகம், செய்வது எதேச்சாதிகாரம், என்றால் அவை நீண்ட நாட்களுக்கு நிலை பெற்று நிற்காது என்பதை நமது அமைச்சர்கள் சிந்தித்துப் பார்கக வேண்டும்

கடந்த பத்து தினங்களாக பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை நமது அமைச்சர்களுக்கு நினைவு படுத்த ஆசைபடுகிறேன், துருக்கி நாட்டில் ஏகாதிபத்திய வெறியோடும், அடக்கு முறையோடும் ஆட்சி புரிந்து வந்த மெண்டாரி இன்று எங்கே இருக்கிறார் தெரியுமா? ராணுவத்தாரால் கைது செய்யப் படடு இராணுவ முகாமில் சிறைப்படுத்தப பட்டிருக்கிறார்

மெண்டாரி துருக்கியில் பெரும்பான்மையான மெஜாரட்டி பலம் கொண்டு ஆட்சி புரிந்து கொண்டு பாராளுமன்றத்தில் 400பேர்கள் அவர்கட்சியிலிருக்கிறார்கள் எதிர்கட்சித் தலைவர் இனுமி சிறுபான்மையோரின் டலத்தால் இருந்து வந்தார்

மெண்டாரி தனக்கு மெஜாராட்டி இருக்கிறது என்ற ஆணவத்தால் நாட்டில் ஜனநாயகத்தைக் குலைத்து எதேச் சாதிகாரத்தையும், அடக்கு முறைகளையும் தாண்டவமாடச் செய்தார் பத்திரிகைகளுக்கு வாய் பூட்டு போட்டார் பத்திரிகை ஆசிரியர்களைக் கைது செய்தார். துருக்கி நாட்டில் அடக்கு முறையையும் கொடுங் கோன்மையையும் கட்ட விழ்த்து விட்டார்

உலகநாடுகளைச் சுற்றி விட்டு பாரதப்பிரதமர் துருக்கிக்குவந்து அங்கார நகரில் தங்கினார் அங்கு துருக்கி பிரதமர் மெண்டாவிடம் கைக்குலுக்கி இங்குள்ளோர் சௌக்கியமா என்று கேட்டார், அவரும் கைகுலுக்கி பாரதத்திலுள்ளோர் சௌக்கியமா? என்று கேட்டு கைகுலுக்கினார்

துருக்கி பிரதமர் தனக்கிருக்கும் மெஜாராட்டி பலத்தை வைத்து ஆணவத்தோடு எதாகடசிகளையும் மக்களையும் மதியாது எதேச்சாதிகாரத்துடன் நடந்து வந்தார்

பாரதப் பிரதமர் நேருவும் துருக்கிப்பிரதமர் மெண்டாவும் அங்காரா நகரில் திறந்த காரில் பவனி வந்தார்கள்

பிரதமர் தனது வழக்கமான புன்னகையுடன் இருகைகளையும் குவித்து வணக்கம் செலுத்தி வந்தார். துருக்கிப் பிரதமர் தனது வழக்கமான முறையில் நெற்றியில் கைவைத்து சலாம் செய்து பவனி வந்தார்

வீதிகளிலே மக்கள் கூடி நின்று கலக்கமான முகத்துடன் இரு பிரதமர்கள் பவனி வருவதைப் பார்த்தார்கள்

மக்கள் முகத்தில் இருந்த கவலைக் குறியைப் பார்தத நேரு ஏன் மக்கள் கவலைக் குறியுடன் இருக்கிறார்கள் என்று கேட்டிருப்பார் அவர்கள் என்ன வெய்யிலில் நிற்கும் களைப்பால் அப்படி இருக்கிறார்கள் என்று கூறியிருப்பார் இரு பிரதமர்களும் கூடிப் பேசிவிட்டு நேரு அங்காரா நகரை விட்டு மடாஸ்கர் நகருக்கு வந்திருப்பார்

துருக்கியில் மாணவர் படையும், வாலிபர் பட்டாளமும் சேர்ந்து மெண்டாவின் கொடுங்கோன்மையை எதிர்த்து பலமான கிளர்ச்சியும் போராட்டமும் நடத்தியது அதை அடக்க தடியடியும் துப்பாக்கி பிரயோகமும் நடை பெற்றது மக்கள் ஜனநாயகத்தை வளர்க்க தங்கள் இரத்தத்தை வீதிகளில் சிந்தினர். துருக்கியே கொந்தளிப்பில் ஆழ்ந்திருந்தது இதைப் பார்த்த இராணுவ அதிகாரிகள் நகரின் அமைதியைத் தாக்க மெண்டாரியைக் கைது செய்து இராணுவ முகாமில் சிறைவைத்தார்கள்

இந்தச் செய்தியை அங்காராவிலிருந்து மடாஸ் நகருச்கு வந்து சேர்ந்து நேரு பத்திரிகையைப் பார்த்து என்ன நினைத்திருப்பார் அங்கு மெஜாராட்டி பலம் என்ன செய்ய முடிந்தது.

துருக்கி சம்பவத்தைக் காட்டி அங்குள்ளோரை மிரட்ட நாம் இதைக் கூறவில்லை

ஏதோ அண்ணாதுரை மெண்டாவைக் காட்டி நம்மை மிரட்டுகிறான் என்று நமது அமைச்சர்கள் நினைக்க வேண்டாம்

அங்கிருந்த மெஜாரட்டி பலம் மக்கள் சக்தி முன் நிற்க முடியவில்லை என்பதைக் காட்டவே இதைக் கூறுகிறேன்

அங்கிருந்தது போன்று இராணுவத்திற்கும் திராவிட முன்னேற்றக்கழகத்திற்கோ எதிர்கட்சிக்கோ தொடர்புகிடையாது அப்படியான நிலைஇங்கு இல்லை அரசியல் சுகமாக நடைபெறவேண்டுமென்பதற்காகவே இதை எடுத்துக் கூறுகிறேன்

அந்த நாட்டில் ஏற்பட்ட ஆபத்து இந்தநாட்டில் ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தால்—பொறுப்பால் இதைக் கூறுகிறேன்

ஆளுங்கட்சி என்றும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்

எதிர்கட்சிகளை அடக்க வேண்டுமென்று நினைக்கக் கூடாது

இன்று நமது அமைச்சர்களின் மீது சொந்தத்தில் பகை கிடையாது ஆட்களின் மீது நமக்குப் பகை கிடையாது

காமராசரும் கக்கனும் நல்ல முறையில் பணியாற்றுகிறார்கள் இன்று மந்திரிகளில் இந்த இருவரும் கடுமையாக உழைக்கிறார்கள்

மந்திரி பக்தவத்சலமும், மந்திரி சுப்ரமணியமும் சுகமாக ஊட்டியிலிருக்கிறார்கள்

ஆனால் காமராசர் கடுமையாக தஞ்சைத் தரணியில் இருபத்தியோர்நாள் சுருவளிச் சுற்று பயணம் செய்து வருகிறார் இதை பார்த்து நானே ஆச்சரியப் பட்டேன்

தஞ்சைத் தரணியில் சுற்றுப் பிரயாணம் செய்து என்ன செய்கிறார் நம்மை தாக்கி நம்மை அழிக்க பலம் தே(கிறார்

நாம் இன்று வடவர்களால் கட்டப்படடு அடிமையாக இருக்கிறோம் நாம் அந்தக் கட்டை அவிழ்த்து விடுதலை பெறப்பாடு படுகிறோம்

ஒரு கொழுத்த காளை கொம்பு சீவப்பட்டு கூருக இருக்கிறது ஆனால் அந்தக் காளையின் காலை பலமான கயிற்றால் ஓடமுடியாது கட்டப் பட்டிருக்கிறது

அந்தக் காளை ஓடி ஓடி தன் காலில் கட்டப்பட்ட கயிற்றின் இறுக்கத்தைத் தளர்த்தி அவிழ்க்க முற்படுகிறது அது போன்றுதான் இன்று இந்தியா என்ற கயிறு கட்டப்பட்டு புளியமரத்தில் கட்டப்பட்டிருக்கிறோம் அதைக் கொஞ்ச கொஞ்சமாக தளர்த்தி கட்டிலிருந்து விடுபட பாடுபடுகிறோம்

அப்படி விடுபட்டதுதான் பம்

(12-ம் பக்கம் பார்க்க)

தலையுமில்லை, காலுமில்லை, தோளுமில்லை முண்டம்-பாரதமாதாவெறும்முண்டம்!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் சிறு சிறு குறுநில மன்னர்கள் இருந்து வந்தார்கள் என்பதற்குப் பலசான்றுகள் இருந்திருக்கிறதே, இந்தியாவிற்குவாணிபத்திற்காக அந்நிய நாட்டிலிருந்து வந்தவர்கள் ஆண்டிருக்கிருர்கள் என்பதற்குப்பலசான்றுகள் இருந்திருக்கிறதே.

இங்கு முதன் முதலாக போர்த்துகிசியர்கள் வாணிபம் செய்ய வந்தார்கள், அதே போன்று பிரெஞ்சுக்காரர்களும் வாணிபம் செய்ய வந்தார்கள்.

நமதுநாட்டிலிருந்த குறுநில மன்னர்களுக்கிடையே இருந்த பகையின் காரணமாக, அவர்களுக்குள்ளிருந்த குரோதத்தின் காரணமாக பிளவு இருந்தது. இதை அந்நியர்கள் கண்டார்கள் அதைப்பயன்படுத்தி, போரிட்டு ஆள நினைத்தார்கள்.

நம்மிடம் இருந்த போர்க்கருவிகள் கத்தி, வில், அம்பு, வேல், வாள் முதலிய கருவிகள. அவர்கள் உபயோகப்படுத்திய துபாக்கி, வெடிகுண்டு முதலிய முதலிய கருவிகள்,

நம்முடைய ஆயுதங்கள், அவர்கள் ஆயுதங்கள் முன் நிற்க முடியவில்லை.

நாம் நூறு கத்திகளுடன் போரிட்டால், அவர்கள் ஒரு துப்பாக்கியால், ஆயிரம் பேர்களை வீழ்த்தி நம்முடைய தலைகளை உருளச் செய்தார்கள் இப்படிச் செய்ததால் இங்கிருந்த ஆட்சியை அந்நியர்கள்கைப்பற்றினர்கள்.

போர்த்துகிசியர் கோவா, டய்யு, டாமன் ஆகிய நாடுகளை தங்கள் சொந்த நாடாக்கிக்கொண்டார்கள். பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி காரைக்கால், நாகப்பட்டிணம் மாகி இவைகளைச் சொந்தமாக்கிக் கொண்டார்கள்.

இந்தியா ஒன்று என்று கூறிக் கொண்டிருப்பவர்களைக் கேட்கிறேன் அன்று ஒன்ருக இருந்திருந்தால், இந்தியர்கள் ஒற்றுமையாக இருந்திருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்குமா, இந்தியா என்றும் ஒற்றுமைப்பட்டிருக்கவில்லை அப்படி இருந்திருந்தால் வாணிபம் செய்யலந்தவன் நாடாள நினைப்பானு இதை நமது நாடாளும் அமைச்சர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும் இந்தியா ஒரே நாடு தான். ஏக இந்தியா—அகில இந்தியா என்று அறியாமல் பேசும் அமைச்சர்களுக்கு பழங்கால அரசியல் வரலாற்றைத் திருப்பிப் பாருங்கள் என்று கூறுகிறேன்.

நீங்கள் போற்றிக்கொண்டாடுகின்ற மாமறைகள் இருக்கிறதே இராமாயணம் பாரதம் அந்த மறைகளிலும் 56 தேசம் என்று குறிப்பிட்டிருக்கிறதே இராமன் ஆண்ட காலத்திலும் ராவணன் ஆண்ட காலத்திலும் கிருஷ்ணன்—துரியோதனர்கள் பாண்டவர்கள் ஆண்டபோதும் 56 தேசம் என்று குறிப்பிட்டிருக்கிறது. சீதை சுயவரமண்டபத்திற்கும் 56 தேசத்து மன்னுதி மன்னர்களும் தான் வந்திருந்தார்கள். என்று உங்கள் மாமறையே கூறுகிறதே, அது மட்டுமா? அலெக்ஸாண்டர் நம் நாட்டின் மீது படையெடுத்த போது இந்தியா ஒன்ருகவா இருந்தது. மெகஸ்தனீஸ் வந்த காலத்தில்ஏக இந்தியாவாகவா இருந்தது.

பாபர் ஆண்ட காலத்திலும் சரி, ஹுமாயூன் ஆண்ட காலத்திலும், ஷாஜஹான் ஆண்ட காலத்திலும் சரி; அக்பர் ஆண்ட காலத்திலும் சரி; நாடு ஒன்ருக—அகில பாரதமாகவா இருந்தது? அகில பாரதத்தின்மீதா கஜினி முறை படையெடுத்தான். அன்று அகில இந்தியாவாக இருக்கவில்லையே சிறு சிறு நாடுகளாகத்தான் இருந்தது வந்தது.

வியாபாரம் செய்வதற்கு வந்தவர்கள் துப்பாக்கியைக் காட்டி சுதேசமன்னர்களை அடிபணிய வைத்தார்கஉ கப்பமும் வாங்கி நாட்டையும் ஆண்டார்களே வியாபாரம் செய்ய வந்தவர்களுக்குள்ளேயே குழப்பம் உண்டாகியது. ஆங்கிலேயர்களும் — பிரெஞ்சுக்காரர்களும் சண்டைப்போட்டு கொண்டார்கள். முடிவில் பிரெஞ்சுக்காரன் தோற்ருன். அவன் நாட்டை விட்டு ஓடிவிட்டான். துப்பாக்கியைக்காட்டி இந்தியாவேயே அடிபணியவைத்தான். ஆங்கலேயன்.

இங்கிலாந்திலே வேலையில்லாதிருந்தவனுக்கும். சோம்பேரியா கத்திரிந்தவனுக்கும் இந்தியாவில் வேலை கொடுக்கப்பட்டது. அங்கே மக்கி—மடித்துப்போன பொருள்களை இங்கே கொண்டுவந்து வியாபாரமும் செய்து கொண்டான், புதுக்கோட்டை, ரஜஸ்தான் பீக்பூர், ஜெய்பூர். ஆகிய சமஸ்தானங்களை சொந்தமாக்கிக் கொண்டான். நாளடைவின் 582 சமஸ்தானங்கள் அவன் காலடியில் வைத்திருந்தான். ஒரு துப்பாக்கியின் மகிமையால் - இங்கு வந்து வியாபாரம் செய்யவந்தவன் 582 சமஸ்தானங்களை தனக்குச் சொந்தமாக்கினன். வாணிகம் செய்யவந்தவர்கள் துப்பாக்கியைக்காட்டி பல பிரிவுகளாக இருந்த நாட்டை ஒன்ருக்கித் தன தாக்கிக் கொண்டார்கள்.

இதோ சவுக்கு மரம் இருக்கிறதே, இந்த ஒரு சவுக்கு மரத்தாலே பந்தல் போட முடியுமா? ஒரு பந்தல் போட பல சவுக்கு மரங்கள் தேவைப்படுகிறது! அதே போல பிரிட்டிஸ் மாகாணங்களை ஏற்படுத்த, பல சிறு நாடுகளிடம் துப்பாக்கியைக் காட்டி ஒரு பிரிட்டிஸ் மாகாணத்தை ஏற்படுத்திக் கொண்டான்! அதன் பிறகு அகில இந்தியாவானது!

பாரதமாதாவின் முடி இமயம் என்றும், பாதம் குமரி முனை என்றும் முந்தானை பர்மா என்றும் வர்ணித்தார்கள் பாரத புத்திரர்கள்!

பாரதமாதாவின் முந்தானையாக, இருந்த பர்மா என்ன வாயிற்று! 1936-ம் வருடம் பர்மா தனியாகப் பிரிந்து பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆட்சியாக மாறியது! தென்றலிலே ஆடிக்கொண்டிருந்த பாரதமாதா முந்தானை 1936-ல் அறுபட்டது!

அப்போது என்ன செய்தார்கள் பாரத புத்திரர்கள்?

இந்தியா விடுதலை அடைய வேண்டுமென்றும், அந்நியர் இந்த நாட்டை விட்டுப் போக வேண்டுமென்றும் பலவித இன்னல்களைப் பெற்ருர்கள்!

காந்தியார், ஆச்சாரியார் நேரு போன்றவர்கள் அரும்பாடுபட்டார்கள். விடுதலைப் பெற்ருர்கள்.

விடுதலை அடைந்த பின்னுவது இங்கு சரியாக இருந்ததா!

ஜனுப் ஜின்னு, தான் இந்தியாவில் இருக்க முடியாதென்றும், தனது மக்கள் வாழும் பகுதிகளைப் பிரித்துக் கொடுத்து விட வேண்டுமென்று கேட்டார்கள்! பாரதமாதவை—இந்தியாவைத் துண்டு போடமுடியாதென்று பாரதப்புத்திரர்கள் அன்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள் முடிந்ததா?

இந்தியாவில் ஆங்கிலேயனின் தூதராக இருந்த லார்ட்மவுண்ட பேட்டன் ஒன்ருக இருந்த இந்தியாவை—பாரதமாதவை துண்டு போட்டார். ஒரு பகுதியை பாக்கிஸ்தான் என்றும், மற்ருெரு பகுதியை இந்தியா வென்றும் பிரிக்கப்பட்டது.

ஒரு பகுதியை நேருவிடமும், இன்னென்றை ஜனுப் ஜின்னு விடமும் கொடுக்கப்பட்டது.

வெட்டப்பட்ட பாரதமாதவின் உடம்பிலிருந்து, இடது தோளையும், வடதுதோளையும் பிரித்து கிழக்கும்பாக்கிஸ்தான்! மேற்குப்பாக்கிஸ்தான் என்று பிரிக்கப்பட்டுவிட்டது,

பிரிவினையே கூடாது, துண்டாடக்கூடாது, பாரதமாதவை வெட்டவிடமாட்டேன் என்று அன்றுசபதம்செய்த அகில உலக மேதை எனப்புகழும் பண்டித நேருவிடம் வெள்ளைககாரன் வெறும் முண்டத்தைததான் ஒப்புவித்தான்!

வெள்ளைக்காரன் இப்படி பல சிற்றரசர்களை, பல நாடுகளை ஒன்றுபடுத்தி. அவன் கீழ் உட்படுத்தி ஆண்டுவந்தானே அதே போன்று பாரதமாதாவின் அருந்தவப்புதல்வர்களும், எல்லோரையும் ஒன்ருகவைத்து அடிமைப்படுத்தி ஆட்சி புரிய எண்ணுகிருர்கள்!

அதாவது சுகபாக அமருவதற்கு—உல்லாசமாக இருப்பதற்கு பல சவுக்கு மரங்களை வைத்து பந்தல் அமைத்துக் கொள்வது போன்று வெள்ளையன் அமைத்தான். அதைப் போன்று பாரதமாதா புதல்வர்களும் பல சவுக்கு மரங்களால் அமைக்கப்பட்ட பந்தலில் அமர்ந்து ஆட்சி செய்கிருர்கள்! அந்த பந்தலில் நமது சவுக்கு மரம் இருக்கிறது! நாம் கேட்கிருேம் எங்கள் சவுக்கு மரத்தை நாங்கள் தனியாகப் பந்தல் போட்டுக் கொள்ள வேண்டும்! எங்களுக்கு எங்கள் மரத்தைக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டால் அமைச்சர்களுக்குக் கோபம் வருகிறது! துண்டாட விட மாட்டோம், வெட்ட விட மாட்டோம் என்று கூறுகிருர்கள்!

இது அருத்த மற்றது! நாங்கள் எதையும் துண்டு போடச் சொல்லவில்லை! எங்கள் பொருளை நாங்கள் எடுத்துக் கொள்கிருேம் என்று தான் சொல்லுகிருேம்!

நன்ருக வளர்ந்துள்ள, நீண்ட உயரமான சவுக்கு மரத்தில் 2 அடி துண்டு வெட்டிக் கொடு என்று கேட்கவில்லை அப்படிக் கேட்டால் நீ கேட்கலாம்.

"ஏனப்பா நீளமாக வளர்ந்திருககும் மரத்தை 2 அடி துண்டு போடச் சொல்லுகிருயே? இது அடுக்குமா? நியாயமா? என்று வடநாட்டு ஏகாதிபத்தியம் என்ற பந்தலில் இருக்கும் எங்கள் சவுக்குமரத்தை அவிழ்த்திக் கொள்கிருேம் என்று தான் சொல்லுகிருேம்!

இந்தியாவில் ஒரே மொழியா பேசப்படுகிறது? இந்திய மக்கள் ஒரே இனத்தவரா? இங்கே ஒரே நாகரீகமா? ஒரே பண்பாடா? ஒரே கலையா? அப்படி ஏதாவது வரலாறு கூறுகிறதா?

நம் மொழி திராவிட மொழி வடநாட்டானுக்கோ, அராபிய மொழி பாரசீக மொழி எல்லாம் கலந்து கலப்பு மொழி!

நம்நாடு எல்லாவித கலைகளிலும் சிறந்து விளங்கியது சிற்பக் கலையில் திராவிட நாடு ஒப்புயர்வோடு விளங்கியது! இங்குள்ள பார்த்தசாரதி கோவிலிலும் திருப்பதி வெங்கடேச பெருமாள் கோவிலிலும் மதுரை மீனுட்சி அம்மன் கோவிலிலும் இருக்கும் சிற்பங்களைப் போல் வேறு எங்கும் காண முடியுமா? எல்லா நாட்டவருக்கும் நம்முடைய நாடு தானே சிற்பக் கலையில் வழி காட்டி வருகிறது! அதே போன்று தான் இசைக் கலையிலும் நம்நாடு சிறந்தது விளங்கியது!

அதே போல் நாடக கலையிலும் நாம் சிறந்து விளங்கினேம்! நம்முடைய இசையில் பலவித ராகங்கள் உண்டு. காம்போதி ராகத்தில் 4 வகை உண்டு. அட்டாணு ராகத்தின் 4 வகை உண்டு. தோடி ராகத்தில் 4 வகை உண்டு! எதிலே—எந்தவிதத்திலே திராவிட நாடு குறைந்திருக்கிறது! நம்முடைய நாட்டில் எல்லா வளமும் இருக்கிறது. நமக்கு எல்லா திறனும் இருக்கிறது. ஆகையால் வடநாட்டு ஆதிக்கத்திலும், தொடர்பிலும் இருந்து விலகி தனித்து வாழ விரும்புகிருேம்? இதில் மற்றவர்களுக்கு என்ன கேடு?

நம்முடைய திராவிட நாடு பிரிந்தால் வாழுமா என்று நமது அமைச்சர்களும், காங்கிரஸ்

(11-ம்பக்கம் பர்க்க)

நாட்டை மீட்க நல்லதோர் போராட்டம் வரப்போகிறது !

விடுதலை வீரர்களே தயாராகுங்கள் !

(அண்ணா பேச்சு)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

யில் பேசிக்கொண்டு, செய்கையில சர்வாதிகாரத்தைக் கடைப்பிடித்து வருகிறது.

மாநிலசர்க்காரும் மத்திய சர்க்காரும் தங்களுக்கு மெஜாரட்டி இருக்கிறதென்ற ஆணவத்தால் மக்களையும் எதிர்கட்சிகளையும் அலட்சியப்படுத்திவருகிறது. எதிர்கட்சிகளையே மதிக்காது இறுமாப்புடனிருந்து வருகிறது 'எதிர் கட்சிகள் தங்கள் பணிகள் செய்வதை பிடிக்க வல்லையானல் ஓடிவிடு அதை அடக்கப் பாரக்காதே,

பக்கத்தில் குடியிருப்பவன் கருவாடு வறுத்து சாப்பிடுகிறான், அந்த வாசனை அடுத்தவீட்டுககாரனுக்குப் பிடிக்கவில்லை, அப்படியானல் இவன் வீட்டைக் காலி செய்து விட்டு வேறு இடத்திற்குப்போய்விடவேண்டும். இவனுக்காக கருவாடு சாப்பிடுகிறவன் நிறுத்த மாட்டான்.

அதுபோன்றுதான் இன்று சாக்காரின் நிலை இருக்கிறது. மக்கள் தங்கள் உரிமைகளைப்பெற, தங்கள் வெறுப்பை எடுத்துக்கூற மக்கள் கிளர்ச்சி செய்தால் "எங்களுக்குப்பிடிக்கவில்லை இது என் ஆட்சியில் நடக்கக் கூடாது இதுஎன் ஆட்சிக்குத் தீங்கு என்று, கூறி மக்கள் கிளர்ச்சியை அடகக நினைத்தால் அந்தசர்க்காருக்கு கூற ஆசைப்படுகிறேன். உனக்கு நாங்கள் செய்வது பிடிக்கவில்லையானல் நீ வெளியே போய்விடு மக்களை மதிக்கும் சர்க்காரானல்-மக்களுக்காகப்பாடுபடும சர்க்காரானல், மக்களின் நலனில் அக்கரையுள்ள சர்க்காரானல் மக்களின் கிளர்ச்சியை மதிக்கவேண்டும், அதற்குப்பரிகாரம் தேட வேண்டும். அதை அடக்க நினைத்தால், தடுக்க முயன்றால் அது என்றும் வெற்றி பெருது.

தங்களுக்குச்சட்டமன்றத்தில். அதிக பலமிருக்கிறதென்றும், பெரும்பான்மை அங்கத்தினர்கள் தங்களிடமிருக்கிருர்கள் என்ற ஆணவத்தால் நமது மாநில அமைச்சர்கள் மக்கள் சக்தியை மதிக்காதிருக்கிருர்கள் அவர்களுக்கு ஜப்பானில் நடந்த சம்பவத்தை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

ஜப்பான் நாட்டுத்தலைவன் "கிஷி" நம்முடைய மாநில அமைச்சர் காமராசரைவிட அறிவிலும் அனுபவத்திலும் சிறந்தவர்,

அவர் தனக்கு அதிக மெஜாரட்டி இருக்கிறது என்ற எண்ணத்தால் மக்களின் சம்மதமின்றி, மக்களின் எண்ணத்தை அறியாது அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்தார்.

இது அந்தநாட்டுமக்களுக்குப் பிடிக்கவில்லை. இதை வாலிபர்களும் மாணவர்களும் எதிர்த்தார்கள்.

அமெரிக்க சர்க்காருக்கு ஜப்பானை அடகுவைத்ததாகஎண்ணினார்கள் முற்போக்கு எண்ணம் படைத்தவாலிபர்கள் எல்லாம் எதிர்த்தார்கள்.

ஆனல் ஜப்பான்நாட்டுத் தலைவர் 'கிஷி தனக்கு மெஜாரட்டி இருக்கிறதென்ற பிடிவாதத்தால் அந்த ஒப்பந்தத்தை 'அமுல் நடத்துவேன்" என்று பிடிவாதம் செய்தார்.

உடனே தன்மானம்'படைத்த ஜப்பான் வாலிபர்கள் லட்சக்கணக்கானவர்கள் ஜப்பான் பாராளுமன்றததிற்கு ஊர்வலமாகச் சென்ருர்கள். அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள். ஆர்ப்பாட்டம் செய்தார்கள், "நாங்கள், நீங்கள் செய்த ஒப்பந்தத்தை எதிக்கிரும். மறுக்கிரும், இந்த ஒப்பந்தத்தால் ஜப்பான் எதிர்கால வாழ்வே சீரழிந்துவிடும், இது ஜப்பான் நாட்டை அந்நியனுக்கு அடகு வைப்பதாகும். இது எங்கள் தன்மானத்தையே விற்பதாகும். இதை எங்களுக்குத் தெரியாது திருட்டுத்தனமாக இரவிலே நிறைவேற்றுகிறீர்கள்" என்று முழக்கமிட்டார்கள் "கிஷியே வெளியே வா" என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். போலீசார் அப்படி அவர்கள் செய்த கிளர்ச்சியை தடுக்கவில்லை. அடக்குமுறை செய்யவில்லை, இருவர்களுக்குமிடையே பாதுகாப்பாக இருந்து வேலி போல் நின்றிருந்தார்கள் மந்திரிகள் உள்ளேயும், மக்கள் பட்டாளம் வெளியேயும் இருந்தார்கள்.

இங்கு செய்தது போல் அவர்கள் உணர்ச்சியை, அவர்கள் உரிமையைத் தடுக்கவில்லை. நீங்கள் அவ்விதம் செய்யாதீர்கள் என்று தடைபோடவில்லை.

"திருமணம் செய்து கொண்டவன் திருமணம் ஆகாதவனை திருமணம் செய்து கொள்ளாதே" என்று தடை போடுவது போன்று நீங்கள் கூச்சல் போடாதீர்கள் என்று கூறி தடைவிதிக்கவில்லை.

ஜனநாயக ஆட்சி, மக்கள் ஆட்சி என்று கூறிக்கொள்ளும் இங்குள்ள ஆட்சிதான் விடுதலை வேட்கையை. உணர்ச்சியைத் தடுக்கிறது, தன்மானம் உள்ளவர்களின் ஊர்வலத்தை தடை செய்கிறது,

ஜப்பான் நாட்டில்லுள்ள வீர உள்ளம்படைத்தவாலிபர்களுக்கு தன்மானம் படைத்த மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள ;இந்த சுதந்திர உணர்ச்சி தமிழ்நாட்டு வாலிபர்களுக்கு ஏற்படாதா?

இந்த உணர்ச்சி நம் நாட்டு வாலிபர்களுக்குஏற்படாதென்று இங்குள்ள ஆட்சியினர் எண்ணுகிருர்களா? அப்படி எண்ணினல் அது தவருன எண்ணமாகும் தப்புக்கணககுப்போட்டவர்களாவார்கள்.

இங்கு அமைச்சர்கள், "ஜனநாயகம்" என்ருல் "பேசாதே", கிளர்ச்சி" என்ருல் 'சொல்லாதே" "பிரச்சாரம்" என்ருல் செய்யாதே" பணம்" என்ருல் "கொடு" என்கிறது. இதுதான மக்கள் ஆட்சியா? ஜனநாயகமா? சிந்தித்துப்பார்க்க வேண்டும்

இப்படிப்பட்ட சர்க்காரை மக்கள் நீண்டநாள் விரும்பமாட்டார்கள், அதை நல்ல ஆட்சி என்று மதிக்கமாட்டார்கள் ஆகவே காமராசர் ஆட்சி அடக்குமுறைகளால் நீண்ட நாட்கள் இருந்துவிட முடியாது.

எதிர்கடசிகள் மற்ற மாநிலத்தில் எப்படிஇருக்கிறது என்பதை ஆளுங்கடசியினர் எண்ணிப்பார்க்க வேண்டும் நாம் பத்திரிகைகளில் பார்க்கிருேம் ஒருவர்கொருவர் நாற்காலிகளை எடுத்து அடித்துக்கொள்வதும் வாயில்வந்தபடி பேசிக்கொள்வதும், சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அவருக்கு ஆசனம் கொடுக்க மறுப்பது வெடிகுண்டுகளை எறிந்து கொள்வதும் புத்தகங்களை எடுத்து வீசிக் கொள்வதுமான நிலை ஏற்பட்டுவருகிறது.

அங்கு சட்டமன்றங்களில் காலித்தனம் நடந்து வருகிறது.

இந்த மாநிலத்தில், சட்டத்திற்கு உட்பட்டு, பொறுப்புடன் கலவரமின்றி கண்டிக்கவேண்டியதைக் கண்டித்துக் கொண்டு மரியாதையான முறையில் நடந்து வருகிருர்கள்.

டில்லி ஆட்சியினரும் மாநில ஆட்சியினரும் இங்கு ஏற்பட்டிருக்கும் விடுதலை உணர்ச்சியை தடைபோட எண்ணுகிருர்கள். அந்தஎண்ணத்தைவிடக்கூடாது இதை இப்படியே விட்டால் "மாட்டைக்கடித்தது,மனிதனைக் கடித்தது" போன்று ஆகிவிடும்

இந்தநாட்டை வடநாடு சுரண்டிக்கொண்டிருக்கிறது. தென்னவரை நேரு சர்க்கார் அலட்சியப்படுத்துகிறது. இங்கு ஏற்பட்டிருக்கும் நாட்டுப்பிரிவினையை டில்லி சர்க்கார் அடக்கப்பார்க்கிறது, அலட்சியம் செய்து வருகிறது.

ஜனப்ஜின்ன பாக்கிஸ்தான் கேட்டபோது நேருவும் காங்கிரஸ்காரர்களும், எதிர்த்தார்கள்,பாக்கிஸ்தான் கிடைக்காது. கிடைக்கவிடமாட்டோம் என்று வீராப்புப்பேசினர்கள். இப்போது பாக்கிஸ்தான் வந்து, பாக்கிஸ்தானிலுள்ளோர் டில்லி வருகிருர்கள் பூரி, சாப்பாத்தி சாப்பிட்டுப்போகிருர்கள். டில்லியிலுள்ளோர் பாக்கிஸ்தான் சென்று பிரியாணிசாப்பிட்டுவருகிருர்கள்.

மராட்டிய மண்டலமும், குஜராத்தி மாநிலமும் ஏற்படுத்த மறுத்தார்கள். அடக்கு முறை செய்தார்கள். அவையெல்லாம் மக்கள் சக்தியின் முன் நிற்க முடியவில்லை. எதிர்த்த நேருவே இரண்டு மாநிலங்களை ஆரம்பித்து வைத்தார், இதை நேரு சர்க்கார் உணரவேண்டும்.

விடுதலை உணர்ச்சியை எதிர்த்த—அடக்கிய எந்த ஆட்சியும் வெற்றி பெறவில்லை. அது வெற்றிபெறவும் முடியாது,

இன்று நம்நாட்டில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்ட—அடிமைப்பட்டிருக்கும் நாட்டை விடுதலை அடையச்செய்ய ஒரு பெரும் போராட்டம் நடத்த வேண்டுமென்ற எண்ணம் வலுத்துவருகிறது.

நாம் போராட்டம் நடத்தியே தீர வேண்டுமென்ற நிலையும் வளர்ந்து வருகிறது. அரசினர் இதை முன் ஜாக்கிரதையுடன் நடந்து, போராட்டம் வராத முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

போராட்டம் வேண்டுமென்று பலர் வற்புறுத்துகிருர்கள். அருமை மகளுடனே, அன்புமனைவியுடன் கொஞ்சிக் கொண்டு எங்கிருந்தாலும் விடமாட்டேன்.

எல்லாவளமும் பொருந்திய நமது நாட்டை சுரண்டல்காரர்கள் சுரண்டிக் கொண்டிருக்கிருர்கள், நமது அமைச்சர்கள் இங்கு சுரண்டுவோருக்கு உடந்தையாக இருக்கிருர்கள்.

'திருடர்களுக்குத் தீப்பந்தம் பிடிப்பவர்களாக' நம் அமைச்சர்கள் இருந்து வருகிருர்கள். இந்த நாட்டை விடுவிக்கும் இலட்சியப் போர் வெகுவிரைவில் வரப்போகிறது, அதற்காக நாம் தயாராக இருக்க வேண்டும், இனி வரப் போகும் இந்தப் போர் இலட்சியப் போராகும். இறுதிப் போருமாகும். ஆகவேநீங்களெல்லாம் இதுவரை கழகத்திற்கு ஆதரவு தந்ததுபோல் ஆதரவு கொடுத்து நமது இலட்சியம் நிறைவேற ஆதரவு தரவேண்டி விடை பெறுகிறேன்.

வணக்கம்.

(என். வி. நடராசன் பேச்சு)

(10ம் பக்கத் தொடர்ச்சி)

மொழியாக கொண்டுவர திட்டமிட்டிருக்கிறது. 12 ஆண்டுகளாக நாம் இந்தியை எதிர்க்கிருேம்—நம் உணர்ச்சியை அறிய முடியாத சர்க்கார் இந்தியை அரசியல் மொழியாக, செயல் முறைக்கு கொண்டு வருகிறது.

இந்திப்பிரியர்களைமுறியடிக்க நமது உறுதுணைத் தளபதியாக கே. எஸ். பாண்டியனை நினைத்து அறப்போருக்கு ஆயத்தமாகுங்கள்,

நம்மை எதிர்நோக்கியுள்ள வா! வா! என்று எதிர்நோக்கி அழைக்கும் அறப்போராட்டத்திற்கு ஆயத்தமாகுங்கள்—ஆதரவு தாருங்கள் எனக் கூறிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

வணக்கம்

இந்தியை எதிர்த்துப் போரிட எல்லோரும் வாரீர்! வாரீர்!

இதில் கொள்கை வேறுபாடோ, கட்சி வேறுபாடோ வேண்டாம்!

செந்தமிழுக்கு ஆபத்து செயலில் காரியமாற்ற செம்மல்களே எழுவீர்!

துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் பேச்சு!

சென்னை வண்ணையம்பதி சஞ்சிவிராயன் கோவில் தெருவில கே.எஸ். பாண்டியன் 3வது ஆண்டு விழா நடைபெற்றது.

அவ்விழாவிற்கு திராவிட முன்னேற்றக் கழக துணைப் பொதுச் செயலாளர், திரு.என். வி. நடராசன் அவர்கள் பேசியதாவது:—

மதிப்பிற்குறிய தோழர்களே! தாய்மார்களே!

இன்று இங்கு கே. எஸ். பாண்டியன் மன்றத்தின் 3-வது ஆண்டு விழா நடைபெறுகிறது. இவ்விழாற்கு என்னை தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்ட, இவ்விழா அமைப்பாளர்கட்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கழக 'வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டவர்களில் கே. எஸ். பாண்டியனும் ஒருவராவர். கே. எஸ். பாண்டியன் வாழ் நாள் முழுவதும் கழக வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர் என்பதை நான் நன்ருக அறிவேன். கழக வளர்ச்சிக்காக தொடர்ந்து பணியாற்றியவர். கழக வளர்ச்சிக்காகத் தன் உயிரையும் அர்ப்பணித்தவர். தன் உயிரையே துச்சமாக மதித்து கழகத்தை வளர்த்தவர், கழகக்கொள்கைகளை பொது மக்களிடம் பரப்பியவர்.

அந்தக் காலத்தில் எவன் ஒருவன் கழகத்தில் இருந்து பணியாற்றினுனே அவன் ஏராளமான தொல்லைகளுக்கு உட்பட வேண்டும். கழகத்தில் சேர்ந்தால் அவன் விஷப்பரீட்சைக்கு ஆளாக வேண்டும். வீட்டிலுள்ளவர்கள், வீதியுள்ளவர்கள், உற்ருர்கள், உறவினர்கள், மனைவி, மக்கள் எல்லோருமே கழகத்தில் இருப்பவனுக்கு பகையாவார்கள்.

பாண்டியன் இந்த தொல்லைகளையெல்லாம் துச்சமென மதித்து, போராட்டங்களில் கலந்து மாற்ருரின் சூழ்ச்சிக்கு ஆளாகி மாண்டார். ஆகவே மாவீரன் பாண்டியன் பெயரால் மன்றம் ஏற்படுத்தி நல்ல முறையில் செயலாற்றும் இவ்வட்டத் தோழர்களை நான் பாராட்டுகிறேன்.

நான் கடந்த நாலைந்துகூட்டங்களில் இதையே வலியுறுத்தி சொல்லி வருகிறேன், நம்மை எதிர் நோக்கியுள்ளது ஒரு அறப் போராட்டம். கட்டாய இந்தியை கொண்டு வந்து நம்தமிழ் மொழியை அழிக்க எண்ணும் ஆணவக்காரர்களுக்கு என்றும் அழியாத சூடு கொடுக்க வேண்டும்.

இந்தி என்ற அரக்கியால் செந்தமிழை அழிக்க எண்ணுகிருர்கள் வடநாட்டார்கள். இந்தியக்குடியரசு தலைவர் ராஜேந்திர பிரசாத் இந்தியை அரசியல் மொழியாக்க வேண்டுமென்று சமீபத்தில் ஒரு அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளார். இனி இந்தி கட்டாய அரசியல் மொழி என்று உத்தரவிட்டுவிட்டார்.

இந்தி படித்தால் தான் தபால் நிலையங்களில் வேலை கிடைக்கும், இந்தி படித்தால் தான் ரயில்வேயில் உத்தியோகம் கிடைக்கும் இந்தி தெரிந்தால் தான் குமாஸ்தாவாகலாம் இந்தி படித்தால் தான் சர்க்கார் அலுவலகங்களில் வேலை கிடைக்கும்,

இதைக்கேட்ட பிறகும்தமிழர்களாகிய நாம் கட்டுப்பாடு தேவையென சும்மா இருந்து விடக்கூடாது கட்சி வேற்றுமையின்றி கொள்கை வேறுபாடின்றி எல்லோரும் ஒன்று திரண்டு இந்தி வெறியர்களுக்கு நல்ல புத்தி புகட்ட வேண்டும். அதை நாம் செய்யா விட்டால் நாம் இருள் சூழ்ந்த உலகில்தான் சஞ்சரிக்க வேண்டும்.

நம கழகம் அறப்போர் தொடங்க வேண்டும்—கூடிய விரைவில் அறப்போரும் தொடங்கும். நீங்கள், தமிழ் நாட்டைக் காப்பாற்ற, தமிழ் அன்னையைக் காப்பாற்ற எல்லோரும் ஒன்று சேர வேண்டும்,

தோழர் கே.எஸ். பாண்டியன் தொண்டினை உணர்ந்து செயல்பட வேண்டும். கழகத்திற்காகப் பாடுபட்ட தோழர்களின் நிலை என்ன ஆயிற்று? கே. வி, கே. சாமி எதிரிகளின் தொல்லைகளுக்கு ஆளாகிமாண்டார். வேலாயுதம் மாற்ருர் சூழ்ச்சிக்கு உட்பட்டு உயிர் நீத்தார செல விருதுப்பம் மஜீத்தும் அதே நிலைக்கு ஆளானுர். ஆனல் நாம் அவர்களைப பற்றி பேசினுல் மட்டும் போதாது

அவர்கள் தொண்டில் நாமும் செயல்பட வேண்டும். அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி, பெருமையடைந்து அறப்போருக்கு ஆயத்தமாக வேண்டும்.

னவே இந்தி எதிர்ப்பு இது மூன்ருவது முறையாகும். முதல் முறை 1938-ம் ஆண்டு ஆச்சாரியாரின் ஆட்சியில் இந்தியை அரசியல் மொழியாக்கினர். அப்போது நாம் திராவிடர் சமகத்தில் இருந்தோம், அப்போது நாம் இந்தியை எதிர்த்து போராடினேம்,

இரண்டாவது முறையாக 1945ம் ஆண்டு இந்தி மொழி கட்டாயமாக்கப்பட்டது. அப்போதும் இந்தியை எதிர்த்து அறப்போர் நடத்தினேம்.

இப்போது மூன்ருவது முறையாக இந்தியக் குடியரசுத் தலை இந்தியை அரசியல் மொழியாக கொண்டு வந்துள்ளார். நாம் இப்போதே படை திரட்டுவோம். தமிழர்கள் ஒன்று சேர்வோம், இந்தியைத் தகர்த்தெறிவோம்.

இந்தியை அழிக்க நம் வாழ்க்கையை அர்ப்பணிப்போம். வெறும் ஏட்டளவில் இந்தியை ஒழிக்க வேண்டுமென்று சொன்னல் போதாது. வாயளவில் பேசினல் போதாது. செயல் முறையில் காட்ட தன்மானமுள்ள தமிழர்களே! ஒன்று சேருங்கள்!



நமக்கு கட்சிவேருக இருக்கலாம்—கொள்கை வேருக இருக்கலாம்—ஆனல் தமிழர்கள்என்ற இன உணர்ச்சியில் இந்தியை அழிக்க எல்லோரும் ஒன்றுபட திராவிட முன்னேற்றக் சழகம் பணிவன்புடன் அழைக்கின்றது.

தமிழரை அடிமைப்படுத்தியது மட்டுமின்றி தமிழ் மொழியை அழித்து ஒழிக்க எண்ணும் இந்திப் பிரியர்களுக்கு — ஆணவக்காரர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க மக்கள் உண்மையை உணர்ந்து அறப்போர் நடத்த வாரீர்.

ஆந்திர மாநிலம் மொழிவழி பிரிய வேண்டுமென்று போராட்டம் நடத்தினுர்கள். அப்போது நேரு ஆட்சி ஆந்திர மாநிலம் என்று பிரித்துக் கொடுத்ததா? இந்திய உபகண்டத்தை பிரிக்க முடியாது என்று தான் கூறியது. ஆந்திர மாநிலத்தில் பொட்டி ஸ்ரீ ராமுலு—போராட்டம் நடத்தினுர். உண்ணுவிரதம் இருந்தார்; போராடினுர்; உயிர் நீத்தார்; பிறகு இந்திய ஏகாதிபத்தியத்தின் புத்தி திருந்தி ஆந்திர மாநிலம் என்று பிரித்துக் கொடுத்தது.

பம்பாய் மாநிலம் மராட்டிய மாநிலமாக மொழி வழி பிரிய வேண்டுமென்று கேட்டது. அகில உலகம் போற்றும் நேரு பிரிக்க முடியாது என்று சொல்லி விட்டார். போராட்டம் நடத்தியது அஹிம்சாமூர்த்தி வழி வந்த ஆட்சி அடக்கு முறையைக் கையாண்டது. துப்பாக்கியால் சுட்டது, பிறகு என்ன செய்ய முடிந்தது. முட்டிய பின் குனிந்து கொடுக்கும் நிலையில் நேரு ஆட்சி நடைபெறுகிறது. முன்பே உணர்ந்து செயலாற்றும் திறன் இல்லாத ஆட்சி, நேரு ஆட்சி. அதே இந்திய சர்க்கார் இப்போது இந்தியை அரசியல் மொழியாக, கட்டாய

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசுக்குப் போட்டிக் கழகமல்ல!

நாட்டு விடுதலைக்காக பாடுபடும் விடுதலை இயக்கம் அது!

(நெடுஞ்செழியன் பேச்சு)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களும் கேட்கிருர்கள், அவர்களுக்குக் கூற ஆசைப்படுகிறேன்.

"என் நன் மதிப்புக்கும் அன்பிற்கும் உரித்தாகும் அமைச்சர்களே, பெருமைக்குரிய காங்கிரஸ் தலைவர்களே, நீங்கள் உலக வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பாருங்கள். அங்குள்ள நிலைமைகளைக் கவனித்துப் பாருங்கள்.

நம்முடையநாட்டைவிட எண்ணிக்கையிலும், வளர்ச்சியிலும் குறைந்திருககும் நாடுகள் வாழ்கிறது. சின்னஞ்சிறு சுண்டைக்காய் நாடுகள் வாழுகிறது. அப்படி அவைகள் வாழும்போது ஒன்பதரைக்கோடி மககள் வாழ முடியாதா?

துருக்கி முதலிய சிறிய நாடுகள் மற்ற பெரிய நாடுகளோடு சமமாக வாழும்போது நாம் என் வாழ முடியாது?

நீங்கள் கூறிவரும் அகில இந்தியாதேசியம் எங்களுக்குப் பயன்படாது. அது வடவருக்குத்தான் பயன்படும்.

அகில இந்தியாவில் ஒட்டியிருப்பதால் எங்கள் நாட்டிற்கு எந்தவித நன்மையுமில்லை எங்களிடம் வரியை வாங்குகிறீர்கள் அதை வடநாட்டின் வளர்த்திற்குச் செலவழிக்கிறீர்கள். எங்கள் நாடு புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

வடநாட்டு சர்க்கார் பாதுகாப்பு என்ற பெயரால் ராணுவத்திற்கென இருநூற்றைம்பது கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிருர்கள்,

தென்னகத்தில் இராணுவம் எங்கே இருக்கிறது, கன்னட மாநிலமான பெங்களூரில் சிறிது இராணுவமும், கேரளமாநிலமான கொச்சியில் சிறு ராணுவமும் வைக்கப்பட்டிருக்கிறது.

ராணுவப்படைகள் எல்லாம் இன்று வடநாட்டில் குவிக்கப்பட்டிருக்கிறது அப்படியிருந்தும் சீனக்காரன் 25 சதுரமைல் நுழைந்து விட்டான். என்ருவது ஒரு நாள் ரஷ்யாவும் சீனவும் ஒன்று சேர்நது விட்டால் இந்தியா ரஷ்யாவின் ஆதிக்கத்திலோ சீனக்காரன் ஆதிக்கததிலோ வந்து விடும் அப்படி வர வேண்டும் என்று நாங்கள் கூறுவதாக யாரும் எண்ணவேண்டாம். இனறு உலகத்திலுள்ள இன்றைய நிலையைப்பார்த்தே தான் கூறுகிறேன்,

அகில இந்தியாவிலிருந்து யாரும் பிரிந்து போகக்கூடாது, அப்படிபபேசுவது ஒற்றுமையைக் குலைப்பதாகும் என்று ஆசியாவின் ஜோதி பண்டித நேரு கூறுகிருர்,

அப்படியானல் இந்தியாவுடனிருந்த கோவா, டய்யூ, டாமன் பகுதிகள் எங்கே? அவைகள் இப்போது, போர்த்துகீசியர்கள் ஆதிக்கத்தில் இருககிறதே அவைகளை விடுவித்தது, போர்த்துகீசியர்களை விரட்ட நேரு சர்க்கார் என்ன செய்தது?

சுண்டக்காய் நாடான போர்த்துகீசை எதிர்த்து போரிட்டு அங்குள்ள இந்தியப்பகுதியைச் சேர்க்க முடியவில்லை. பின் ஏன் இராணுவத்திற்கு இவ்வளவு செலவு செய்யவேண்டும்.

இந்தியா மிகுந்த வல்லமை பொருந்தியது, அதன் இராணுவம் பலம் பொருந்தியது என்று பெருமை பேசிக் கொண்டிருக்கிருர்கள். ஆனல் சைனக்காரன் இந்திய எல்லைக்குள் வந்து, இந்தியப்பகுதியை கைபற்ற இருக்கிருன் என்று கூறப்படுகிறது. இவைகளைத் தடுக்கராணுவம் என்ன செய்தது? எங்கள் வரிப் பணத்தைவைத்து இராணுவத்திற்கு அதிகம் செலவு செய்து வடநாட்டுப் பகுதியைக் காககப் படுகிறது. இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்து இராணுவத்தைப் பெருக்கி வடநாட்டின் நலத்தைப்பாதுகாக்கப் படுகிறது எங்கள் நாட்டை எங்களிடம் ஒப்புவித்தால், எங்களால் பாதுகாத்துக்கொள்ளமுடியுப்? கடல் வளமும், மலைவளமும், மற்றவசதிகளும் உள்ள எங்களால் தனித்திருந்து வாழ முடியாதா? வசதியற்ற நாடுகளெல்லாம் இன்று நல்ல முறையில் வாழ்ந்து வருகிறது, மற்ற நாட்டார் பெற்றுள்ள அந்தஸ்தையும் பெறறிருக்கிறது, ஆகவே எங்கள் நாட்டைப்பிரித்துக் கொடுத்துவிட வேண்டும்.

ஒன்றரைக் கோடி மக்களைக் கொண்ட பர்மா எந்த துன்பமோ, துயரமோ, பஞ்சமோ, பசியோ இன்றி சுகமாக வாழ்கிறது. சின்னஞ்சிறிய நாடான மலேயா குறைந்த மக்களைக் கொண்டு வாழ்கிறது. சிலோன் 86 லட்சம் மக்களைக் கொண்டு வாழ்கிறது.

லெபனன் வாழ்கிறது. 2 லட்சம் மக்களைக் கொண்ட லக்ஸம்பர் வாழ்கிறது. இதை விட சிறிய சுண்டைக்காய் நாடுகள் சீரும் சிறப்போடு வாழ்கிறது. எலலா வளமும் கொண்ட திராவிடநாடு வாழாதா? அது மட்டுமா 5,400 மககளைக் கொண்ட அண்டோராவாழ்கிறது அதற்கு ஒரு ஆபத்தும் இலலை, 9½ கோடி மக்களைக் கொண்ட திராவிட நாட்டிற்கு என்ன திங்கு வரும். ஏக இந்தியாவில் சீனககாரன் நுழைநதது போல் எங்கள் திராவிடத்தில் எவனும் நுழையமுடியாது,

அகண்ட இநதியா என்றும், மற்றநாட்டைவிட இந்தியா மிகவும் வல்லமையடைய்து என்றும் அதை எவராலும் அசைக்கமுடியாதென்றும் கூறி வந்தார்கள் இன்று சைனக்கான் எல்லைக்குள் புகுந்துவிட்டான்.

இந்தியாவின் பிரதமர் இப்போது நிம்மதியாக வாழவில்லை அவர் எந்தவித கவலையுமின்றி தூங்கவில்லை. அவர் நினைவெல்லாம் சைனக்காரனைப்பற்றியே இருக்கிறது!

அவர் நிம்மதியாகத் தூங்கி 8 மாதமிருக்கும். அப்படி இருக்கும்போது எங்களை வாழ்வீர்களா? வாழ முடியுமா என்று கேட்பது அர்த்தமற்றது, நாங்கள் வாழமுடியும்,

வடநாட்டுக்காரன் இங்கே வந்து எல்லா வியாபாரத்தையும் கைப்பற்றி விட்டான்.

நம்முடைய மக்கள் வடநாட்டில் போய் கூலிவேலை செய்கிருர்கள், பியூன் வேலை செய்துவருகிருர்கள்.

வடநாட்டார் இங்கு வட்டிக்கடை, காப்பிக்கடை முதல் பெரிய பெரிய வியாபாரத்தில் லாபம் சம்பாதிக்கிருர்கள். இந்த நாட்டைச் சுரண்டுகிருர்கள்,

சமீபத்தில் இந்தியை அரசியல் மொழியாகக் கொண்டு வந்து ஆதிககத்னதச் செலுத்தமுற்பட்டுவிட்டார்கள். அதை நாம் எதிர்க்க வேண்டும். அதற்கான பெரும் போராட்டத்தைத் துவக்கவேண்டும். வாலிபர்களும், மாணவர்களும் அதற்காக இப்பொழுதே தயாராக இருக்க வேணடும்.

ஆகவே நம்முடைய நாட்டை நாம் ஆள, நம்முடைய உரிமைகளை நாம் பெற திராவிட முன்னேற்றக் கழகம் இடும்கட்டளைக்கிணங்கப் பாடுபட வேண்டும்,

மகமதலி ஜின்ன பாக்கிஸ்தானைப் பெற மகமதியர்கள் அரசியல் கட்சிகளைமறந்து ஒத்துழைத்தார்கள். அதன்படி எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து பாடுபட்டது. ஆகவே நம்முடைய நாட்டை மீட்கும் விடுதலைப் போரில் யாவரும் சேர்ந்து பாடு வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

வணக்கம்.

திருமணங்கள்!

★

பம்பாய் திருமகள் அன் கம்பெனியின் உரிமையாளரும் நமது "மாலைமணி" பத்திரிகையின் விற்பனையாளருமான திரு, ஜேசுமிக்கேல் அவர்களின் அருமைச சகோதரர் ஞானலூயிஸ் ராஜாவுக்கும்!

கள்ளிகுளம் திரு எ. எஸ். கேமரியதாஸ் அவர்களின் புதல்வி அமலி தங்கராணிக்கும் 6-6-60ம் நாள் கள்ளிகுளத்தில் சங். பி. எஸ். பாண்டியன் அவர்கள் முன்னிலையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

மணமக்கள் பல்லாண்டு வாழ்ந்து இல்லறம் இனிது நடத்த மாலைமணியின் சார்பில் வாழ்த்துகிருேம்,

——

காரைக்குடியில் நமது மாலைமணி விற்பனையாளர் திருசோம. தியாகராசனுக்கும், காரைக்குடி ராமகிருஷ்ணன் செட்டியார புதல்வி சீதாலக்குமிக்கும் 5-6-60ம் நாள் நா. புதூர் பெருமாள் கோவில் திருமண மண்டபத்தில் திருமணம் இனிது நடைபெற்றது.

மணமக்கள் இன்பமுடனும், இனிதும் வாழ வேண்டுமென்று மனமார "மாலைமணி"யின் சார்பில் வாழ்த்துகிருேம.

——

நல்லாடை மாலைமணி விற்பனையாளர் தோழன் பக்கிரிசுவாமிக்கும் சரோசாவுக்கும் 8-6-60ம் நாள் நல்லாடையில் அறிஞர் அண்ண அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

மணமக்களை வாழ்தி மாயூரம் கவிஞர் கருணைநந்தம், மாயூரம் நகர மன்ற உறுப்பினர் ந. கிட்டப்பா, பொறையார் சி. ஜம்பு சீர்காழி டி. கே. கோபாலகிருஷ்ணன் பி. ஏ. மேக்கிரி மங்களம் கோ. சி. மணி, விளாநகர் எஸ். கணேசன் ஆகியோர் நல்லுரை நவில்வார்கள். மண மக்கள் பல்லாண்டு வாழ்ந்து வளமுடன் வாழ மாலைமணியின் சார்பில் வாழ்த்துகிருேம்.

Registered as a News Paper in CEYLON
Regd. No.M. 7074 MALAIMANI விலை 16 காசு Phone 83285
இலங்கையில் 20 சதம்

மெஜாரட்டி பலத்தை அடக்கு முறை செய்தவர் நிலை என்ன?

துருக்கி பாடம் கற்பிக்கிறது!

(அண்ணா பேச்சு)
(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பாய், நகரம் இன்று மராட்டியமும் குஜராத்தி மண்டலமாக கட்டிலிருந்து விடுபட்டிருக்கிறது நாகர்கள் அந்தப் பிடியிலிருந்து விடுபட முனைகிறார்கள் நாமும் இந்தியா என்ற வட நாட்டுக் கட்டிலிருந்து விடுதலை பெறப் பாடுபடுகிறோம் இதைத் தெரிந்து கொள்ளாது அமைச்சர்கள் நம்மைக் கேலி செய்கிறார்கள்

நான் சட்டமன்றத்தில் பேசும்போது புள்ளி விபரங்களோடு வடநாடு நம்மை புறக்கணிப்பதை, நம்மை அடிமைப்படுத்துவதை எடுத்துக் கூறி பேசினேன் திராவிடநாடு திராவிடருக்காக வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறினேன்

காமராசர் டில்லிக்குப் போகும்போது நேரு கேட்பார் என்ன அந்த முன்னேற்றக்கழகம் தென்னாடு வடநாடு என்று பேசுகிறதே அதைவளர விட்டுக் கொண்டிருக்கிறாயே என்று

காமராசர் நேருவிடம் எந்த மொழியில் பேசி வந்தார் என்று எனக்குத் தெரியாது அவர் இந்தியில் பேசுவாரோ பேச மாட்டாரோ அது தெரியாது ஆங்கிலத்தில் பேசும் திறமை பெற்றிருக்கிறாரோ என்னவோ அதுவும் நானறியேன்

எனது தலைவர் பெரியாருடன் இந்தியத் துணைக்கண்டத்தில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறேன். அவர் வடநாட்டு தலைவர்களுடன் சிறு ஆங்கிலம் பேசுவார் பின் ஜாடையிலேயே புரியும்படி செய்து விடுவார்

நமது காமராசரும் அப்படிச் செய்வாரோ என்னவோ எனக்குத் தெரியாது காமராசர் ஆங்கிலத்தில் பேசினால் ஆங்கிலத்திற்கு மதிப்பே போய் விடும்!

இன்று நமது அமைச்சர்கள் நம்மைக் காட்டிதான் அங்கு காரியங்களைச் சாதிக்கிறார்கள்;

நமது திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லும் வடக்கு வளர்கிறது தெற்கு தேய்கிறதென்ற விவகாரத்தைச் சொல்லித் தான் நமது மாநிலத்திற்கான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

நான் சட்ட மன்றத்தில் பேசும் போது நமது அமைச்சர்களிடம் கூறினேன் நீங்கள் டில்லிக்குப் போகும்போது நானும் தான் கூட வருகிறேன் என்னை காட்டித்தான் நீங்கள் அங்கு பேசமுடியும் என்று சொன்னேன் அதன்படிதான் இன்று இங்கு அலுமனியத் தொழிற்சாலை வைக்கவும் கெஞ்சியிருக்கிறார்கள்

காங்கிரஸ்கட்சி இன்று வளம் குறைந்து வருகிறது அதை மக்கள் ஆதரிக்கவில்லை அதை அமைச்சர்கள் உணராது வளர்ந்துவரும் நம்மை ஏசித்திரிகிறார்கள்

காமராசர் நம்மை பார்த்துக் கூறுகிறார் பெரியார் திராவிட நாட்டுப் பிரச்சினையை விட்டு விட்டார் நீங்கள் ஏன் வைத்திருக்கிறீர்கள் அதை விட்டுவிட்டு பெரியாருடன் சேர்ந்து கொள்ளுங்கள் என்று

காமராசருக்கு ஏன் இந்த வம்பு? என்று இவர் திராவிடக் கழகத்தின் வாயற்காப்போர் ஆனார்

பெரியார் திராவிடநாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டார் அதை ஒப்புக் கொள்கிறேன் தமிழ்நாடு பிரிய வேண்டு மென்கிறார். அதைக் காமராசர் ஒப்புக் கொள்கிறாரா?

நாங்களும் பெரியாருடன் இருந்தோம் திராவிடநாடு பிரிய வேண்டுமென்று கேட்டோம் இன்று அவர் தமிழ்நாடு கேட்கிறார் அப்படி தமிழ்நாடு பிரிய காமராசர் ஒப்புக்கொள்கிறாரா?

பெரியார் பிரிவினையே கூடாதென்று சொல்லவில்லையே திராவிடநாடு கேட்டார் அது தாமதமாகு மென்றெண்ணி தமிழ்நாடு கேட்கிறார்

பிரிவினை வேண்டுமென்பதற்காகத்தானே கையில் தீப்பந்தம் பிடித்து நான்கைந்துதினங்களில் இந்தியாவின் தேசப்படத்தைக் கொளுத்தி பிரிவினை கேட்கிறார்

திராவிடம் கேட்டார் நான்கு மாநிலங்களும் சேர்ந்துகூட்டாட்சியாக இருக்க வேண்டு மென்று சொன்னார்

அதை பெறுவதற்கு ஆந்திரக்காரர், கன்னடக்காரர், கேரளக்காரர் உடன் ஒத்துழைக்க வரவில்லையென்ற கோபத்தால் அவசரமாக தன் காலத்திலேயே தமிழ்நாடாவது பிரிந்து விட வேண்டுமென்று எண்ணுகிறார்

பெரியார் எப்போதும் தைரியசாலி எதற்கும் பயப்பட மாட்டார் யார் வந்தாலும் சரி எவர் ஆதரித்தாலும் சரி தான் தனியாக தமிழ்நாட்டைப் பிரித்து விட எவர் துணையின்றி தனியாகவாவது அந்தக் காரியத்தைச் செய்யவேண்டு மென்று செய்து வருகிறார்

நம்முடைய குடும்பத்தில் கூட வயதான பெரியவர்கள் பசியால் பொறுக்க மாட்டார்கள்

பத்து பதினொரு மணியானால் அவர்களுக்குப் பசி அதிகமாகி விடும் சிறு குடலை பெரு குடல் தின்னும் உடனே மருமகளை அழைப்பார் என்னம்மா சமயலாகி விட்டதா பசிக்கிறது எனக்கு இருப்பதை கொஞ்சம் போடு என்று கேட்பார் மருமகள் கொஞ்சம் பொறுங்கள் அடுப்பில் கறி வேகிறது அதை வறுத்தபின் சாதம் போடுகிறேன் என்று அந்தம்மாள் கூறுவார்கள் அதெல்லாம் வேண்டாம் என்றால் முடியாது இருக்கிற சாறை ஊற்றி ஊறுகாய் வைத்தால் போதும் என்று கூறி சாப்பிடுவார்கள்

ஆனால் நமது எம். எஸ், ராமசாமியை அந்த வயதான தாத்தாவுடன் சாப்பிட வாருங்கள் என்று கூப்பிட்டால் போவாரா அவர் கூறுவார் அவர் சாப்பிட்டும் நான் பின் சாப்பிடுகிறேன் கறியை நன்றாக வறுத்து முந்திரி பருப்பு கூட சேர்த்து செய்து வை என்பார்

அது போன்று தான் திராவிட நாட்டுப் பிரிவினை தாமதமாக ஏற்படும் தமிழ் நாட்டுப்பிரிவினையை உடனடியாகச் செய்ய நினைக்கிறார்.

நாங்கள் வாலிபர்கள் பொறுத்திருந்தேனும் இன்ப திராவிடத்தைப் பெற நினைக்கிறோம்

நாங்கள் புத்தியில்லாது இந்த காரியத்தில் ஈடுபடவில்லை நாங்கள் பயித்தியக்காரர்களல்ல எங்களுக்குத் தெரியும் திராவிட நாட்டைப்பெறுவது எப்படி என்பது நாங்கள் வரலாற்றைப் படித்திருக்கிறோம் இல்லாத ஒன்றை, வராத ஒன்றை இட்டுக்கட்டி கேட்கவில்லை ஆகவே

காமராசர் கேட்கிறார் நம்மைப் பார்த்து பெரியாரே விட்டுவிட்டார் நீங்கள் ஏன் திராவிட நாடு கேட்கிறீர்கள் என்று

இது அர்த்தமற்ற பேச்சு விளையாட்டுப் பேச்சு சிறு பிள்ளைகள் பேச்சு அவர் விட்டு விட்டால் நாங்கள் விட்டுவிடவேண்டுமா?

வாதத்திற்காகவே காமராசரைக் கேட்கிறேன்

காங்கிரசை அரும் பாடுபட்டு வளர்தவர் ஆச்சாரியார் பல தியாகங்களைப் புரிந்தவர் ஆச்சாரியார் காந்தியார் சர்தார் பட்டேல் இவர்களுடன் நல்ல பணிகள் புரிந்து காங்கிரசை வளர்த்தார் காமராசரின் குருவான சத்திய மூர்த்தியின் குரு. ஆச்சாரியாரே காங்கிரசை விட்டு விட்டாரே நீ காங்கிரசை விட்டுப் போகிறாயா? நீ காங்கிரசிலிருந்து விலகி சுதந்திரக் கட்சியில் சேர்ந்து விடுகிறாயா? நீ சுதந்திரக் கட்சியில் சேர்ந்து விடு நான் திராவிடக் கழகத்தில் சேர்ந்து விடுகிறேன்

திராவிடக் கழகம் எனக்குப் புதிதல்ல அது எனக்குப் பழையது அந்த போவர்த எனக்குப் பாதை தெரியும் கதவு மூடப்பட்டிருந்தாலும் புதிய பாதை எனக்குத் தெரியும் எந்தப் பாதையில் போவதென்பதையும் நானறிவேன், ஆகவே ஆச்சாரியார் இல்லாத காங்கிரசில் காமராசருக்கு வேலை இல்லை. அவர் உடனே சுதந்திரக் கட்சியில் சேர்ந்து கொள்ளட்டும்

காமராசர் வாயற்படியில் நின்று கொண்டிருப்பவர்போல் அங்குவா என்று அழைக்க வேண்டாம் அவருக்கு கூர்க்கா வேலை தேவையில்லை அந்த வேலையும் அவர் செய்ய வேண்டாம்

திராவிடர் கழகமாளிகையைக் கட்டியவன். நான் அங்கு போக யாருடைய தயவும் எனக்குத் தேவையில்லை

திராவிட நாடு விடுதலைபெற்று சுதந்திர நாடாக ஆவதற்காக பல சான்றுகள் இருக்கிறது நாம் ஆண்ட இனம் என்பதற்கு சேரன் செங்குட்டுவன் கதை நமக்கு ஆதாரம் காட்டுகிறது நம்முடைய பெருமையைக் காட்டுவதற்கு இரண்டாயிரம் ஆண்டு கட்குமுன் உண்டான விளக்கம் நமக்கு வழிகாட்டுகிறது

இன்று நமக்கு கடுமையான சூழ்நிலை வந்துவிட்டது நம்மை அடக்கி ஒடுக்கிவிட அரசினர் சமயம் பார்க்கிறார்கள்

இப்போது அடக்குமுறை செய்ய பயப்படுகிறார்கள் இருந்தாலும் நம் வளர்ச்சியால் அவர்குப் பயம் பிறந்து விட்டது

நாட்டு மக்களுக்கு விடுதலை உணர்ச்சி வந்திருக்கிறது நாம் போர் கொடி உயர்த்தும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது நாம் போராட்டத்தில் இறங்கினால் அது சாமான்யமாக இருக்காது

நம்முடைய கழகத்திற்குத் தடை போடலாம்

நாம் காட்டில் நடமாடாது செய்யலாம் அதை யெல்லாம் நாம் எதிர்ப்பார்த்துத் தான் இருக்கிறோம்

இன்று அண்ணாதுரை எங்கே என்றால் ஆற்காடு போய் இருக்கிறார் அரக்கோணம் போய் இருக்கிறார் என்று கூறலாம் இனி அண்ணாதுரை எங்கே என்றால் அலிபுரம் சிறையில் ஆறு வருடம் கடுங்காவல் தண்டனை பெற்றிருக்கிறார் என்ற செய்தி கூறும் நிலைவரலாம் இப்படி நம் தோழர்கள் பலரை அடக்கலாம் ஆனால் மக்களை அடக்க முடியாது மக்கள் விழிப்பு அடைந்துவிட்டார்கள்

மாற்றார்களால் நமக்கு ஆபத்து ஏற்படலாம்

நம்மை எந்தவித அடக்குமுறையால் அடக்கினாலும் மக்களுடைய எழுச்சியை அடக்க முடியாது அந்நிலை ஏற்படுவதற்குள் அரசினர் அதற்கானவன செய்ய வேண்டும்,

நாமும் நம்மைத் தயார்செய்து கொண்டு நமது நாட்டு விடுதலைக்காக எல்லாவித தியாகங்கள் புரிய முன் வரவேண்டும் ஆகவே எப்பொழுதும்போல் இனி வரப் போகும் காலங்களில் ஆதரவு கொடுத்து கழகத்தின் கையை ஓங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்

வணக்கம்

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35. வாணியர் தெரு, சென்னை-14.